1230

# சித்தன்

மாலை 2. மணி 12.

OFFICE OF THE ...
18 DEC 1938
MADRAS
JL
ள2M, M35CN
M36.2.12
139935



கல்யாணத்தில் ஓர் தோற்றம்.

## உள்ளுறை.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | கதவுகள் திறந்தன ... ... | 555 |
| 2. | சேதுமணி ... ... | 559 |
| 3. | சினிமாவின் சீரழிவு ... ... | 564 |
| 4. | கண்கள் ... ... | 569 |
| 5. | ஆந்திர வீர மாது ... ... | 571 |
| 6. | தமாஷ் கடிதம் ... ... | 574 |
| 7. | ஆண் பெண் உரிமை ... ... | 576 |
| 8. | மதிப்புரை ... ... | 583 |
| 9. | குணவாகடம் ... ... | 587 |
| 10. | மூலிகைப்பகுதி ... ... | 591 |
| 11. | செய்தித்திரட்டு ... ... | 595 |
| 12. | நாகானந்தன் ... ... | 600 |


### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு | உள் நாடு | ... | ரூ 0—8—0 |
| ,, | வெளி நாடு | ... | ரூ 1—0—0 |
| | தனிப்பிரதி | ... | ரூ 0—0—9 |
| | ஜீவிய சந்தா | ... | ரூ. 10—0—0 |

புதிதாய்ச் சேருகிற சந்தாதாரர்களுக்கு அவர்கள் பணம் அனுப்பி சந்தாதாரராய்ச் சேருகிற மாதத்திலிருந்து ஒரு வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பப்படும். பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மீ 10-உ வெளியாகிறது. சந்தாவை மணியார்டரில் அல்லது ஸ்டாம்பாக அனுப்பவேண்டும். வெளி நாட்டினர் இம்பீரியல் கூப்பனுகவும் போஸ்டல் ஆர்டராகவும் அனுப்பலாம். வி.பி. அனுப்பினால் 6 அணா அதிக செலவாகும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு | முழுப்பக்கம் | ரூ. 5—0—0 |
| ,, | அரைப்பக்கம் | ,, 3—0—0. |
| ,, | கால்பக்கம் | ,, 1—8—0. |

மானேஜர், "சித்தன்", பழனி. S. I.

"சித்தனில்" வெளிவரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

# "சித்தன்"


பழனி.

ஓர் உயரிய மாதப்பத்திரிகை.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

ஆசிரியர்:— C. P. சாமி.

| மாலை 2. | டிசம்பர். 1936. | மணி 12 |
|---|---|---|



13 DEC 1938

189935


## கதவுகள் திறந்தன!

ஜாதிப் பேய்கள் தலைவிரித்தாடும் கேரள நாட்டின் சரித்திரத்தில் ஓர் புதிய சகாப்தம் ஆரம்பித்துள தெனக்கூறும்படி திருவனந்தபுரம் பத்மநாபசாமி ஆலயம் உள்பட சமஸ்தானக் கோயில்கள் யாவும் இந்து மதத்தினர் அனைவர்க்கும் ஜாதிபேதமின்றி சமீபத்தில் திறந்து விடப்பட்டுள்ள நற்செய்தி முன்னேற்ற உலகின் உயிர் நாடியாகும். எனவே ஜாதி இறுமாப்புக்கொண்ட ஓர் கூட்டத்தினரின் ஏகபோக உரிமைகட்கும் தீண்டாமைக்கும் திருவாங்கூர் மகாராஜா அவர்களின் செங்கோல் முறைமை சாவுமணி யடித்துவிட்டதென்றே சொல்லலாம். சில ஆண்டுகளுக்கு முன் திருவனந்தபுரத்திலுள்ள கோவிலுக்கு தரிசனார்த்தமாய்ப் போன இந்து தலைவர்கள் பட்ட அவஸ்தை கேட்போர் மனதை உருக்கும். என்னே அங்குள்ள நம்பூதிரிகளின் அட்டகாசம், சகிக்கத்தா மன்று. நிற்க;

"கன்னியும் வானுங்கூடி கலங்குங்கா லோர் பொழுதில்
பின்னமிலா முத்திரத்தாற் பிண்டந்தான் — நன்னயமாய்
உற்பவமாம் ஓரிலெவன் மேற்குலத்தோன் ஈனனெவன்
விற்பன விவேக வேமா" என்ற

தமிழ்நாடு ஆவணக் காப்பக



வேமன சாமிகளின் அரிய வாக்குப்படி ஆண்பெண் புணர்ச்சியின் பயனாய் வாய்க்கும் மனிதப் பிறவியில் இவன் மேற்குலத்தான், இவன் கீழ்குலத்தான் என்று கூறுவதும் பிரிவினை செய்வதும் அறிவுளோர் செயலாகாது. ஆதலால் இவ்வித அநாகரீகச் செயலினின்றும் விலகி தமது ஆதிக்கத்திலுள்ள பத்மநாபன் சன்னதியின் மணிக்கதவுகளையும் இதர கோயில்களையும் யாவர்க்கும் பொதுவாகத் திறந்து விட்டுள்ள திருவாங்கூர் இளங்கோ - அவர்களின் வீரச்செயலைப் பெரிதும் பாராட்டவேண்டியதே நம்மவர் கடமையாகும்.

இனி தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில்களில் நுழைந்தால் சாமி தீட்டுப்பட்டுவிடும் என்ற பூச்சாண்டி மலையேறி விட்டது. சமய சீர்திருத்தவாதிகளை நாஸ்திகர்களென்றும் மதத்தில் யாவருக்கும் சம உரிமை வேண்டும் என்று கூறுபவர்களை மதத்துவேஷிகளென்றும் வாய்ப்பறை சாற்றும் சுயநலக்காரர்களின் ஜம்பம் இனி பலிக்காது. மதாச்சாரியர்களும் வைதீகக்குடுக்கைகளும் இப்போது என்ன செய்யப்போகிறார்கள் என்பதே நமது கேள்வி.

சீரும் சிறப்பும் பெற்றிருந்த நமது நாடு தற்போது கீழ்நிலையடைந்திருப்பதற்குக் காரணம் நம்மில் 7 - கோடி மக்களை நாயினும் கேடாக மதித்து நடத்தி வந்ததாலென்பதை இப்போதாவது சமயவாதிகள் உணர்வார்களா? இது தான் போகட்டுமென்றால் நமது இந்து சமூகமும் தேய்பிறை போல் க்ஷீணித்து வருவதற்கு இத்தீண்டாமையே காரணம் என்பதையாவது ஒப்புக் கொள்கிறார்களா? எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் மதமாற்றம் செய்தார்களே யாது காரணம்? இத்தீண்டாமையாலன்றோ? இவைகளையெல்லாம் சிறிதும் சிந்தியாது வாய் வேதாந்தம் பேசுதலால் என்ன பயன்? நாம் ஒரு வகுப்பாரை அடிமைகளாகப் பாவித்து நடத்தி வருவதனாலன்றோ நாமும் ஒருவர்க்கு அடிமைப்பட்டுழலுகிறோம். எத்தனை காலந்தான் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் ஒதுக்கப்பட்டிருப்பர்? அவர்களுக்கும் நற்காலம் வரவேண்டாமா? அந்நற்காலம் இப்போது திருவாங்கூர் இராஜ்யத்தில் உதயமாகி விட்டது. இது போன்றே ஏனைய சமஸ்தானங்களும் முன் வருமென்றே எதிர்பார்க்கிறோம். அக்காலம் தூரத்திலில்லை. வெகுசமீபத்திலே தானுளது. அப்போதுதான் நாமும் நமது நாடும் க்ஷேமமடைய மார்க்கமுண்டு.



சில வருடங்கட்கு முன்னர் திருவாங்கூர் இராஜ்யத்திலுள்ள வைக்கத்தில் தீண்டாமை விலக்கின் பொருட்டு ஓர் சத்தியாக்கிரகம் நடைபெற்றது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதைத் தலைமைபூண்டு நடத்தி அதனால் பல இன்னல்களை யனுபவித்தவர் ஈரோட்டுப் பெரியாராவர். இக்காரணம் பற்றியே அவருக்கு வைக்கம் வீரர் என்ற சிறப்புப்பெயர் இன்னும் வழங்கி வருகிறது. அவரும் மகாத்மா காந்தியடிகளும் இதர தலைவர்களும் சலியாதுழைத்ததுவே இத்தகைய நற்பயனளித்துளது. இதுவே முற்போக்கு; இதுவே நாகரீகம்; இதுவே இராஜரீகம்; இதுதான் தெய்வப்பணியாம்.

ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சுமார் 40-புலையர்களுடனும் சில ஜாதி இந்துக்களுடனும் திருவனந்தபுரம் பத்மநாபஸ்வாமி ஆலயத்திற்குள் நாளது மீ 1வ. காலை பிரவேசித்து உள் பிரகாரம் முதலியவற்றிற்குள் நுழைந்து விக்கிரகத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டு வெளி வந்தார்கள் என்றும் அதற்கு யாரும் எவ்வித தடையும் செய்யவில்லையென்றும் தெரிவிக்கிறார். சர்வ வல்லமையுள்ள பத்மநாபனுக்கே சம்மதமான விஷயத்தில் யார்தான் தலையிடமுடியும்? ஆதலால் பத்மநாபனுக்கு ஜே! சித்திரை திருமேனிக்கு ஜே! திருவாங்கூருக்கு ஜே!

---

## மன்னரும் மந்திரி சபையும்.

மாட்சிமை தங்கிய 8-ம் எட்வர்ட் மன்னருக்கு வயது 45. மகுடாபிஷேக சமயமானதால் தன் விவாகத்தைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தது. தான் காதலிக்கும் அமெரிக்க மாதான மிஸஸ். சிம்சனை விவாகம் செய்துகொள்ள உத்தேசித்துள்ளார். பார்லிமெண்டும், மந்திரிசபையும் அம்மாது அயல் தேசமானதாலும், ஏற்கனவே 2-தடவை மணம்செய்து கொண்டவராயுமிருப்பதால் ஆக்ஷேபனை செய்கின்றனர்.

முடிவு சீக்கிரம் வெளியாகும்.

# அறிக்கை.

இம்மாதத்தோடு "சித்தன்" பத்திரிகைக்கு 2-ம் ஆண்டு முடிகிறது. 1937-ம் ௵ ஜனவரி ௴ முதல் 3-ம் ஆண்டு துவங்குகிறது. அடுத்த இதழிலிருந்து நமது பத்திரிகையை, ஏற்கனவே அறிவித்துள்ளபடி பெரிய சைசில் அதிக படங்களுடன் வெளியிட முடிவு செய்துள்ளோம். சென்ற இரண்டு ஆண்டுகளாக நமது பத்திரிகையை ஆதரித்துவந்துள்ள அன்பர்களுக்கும், அபிமானிகளுக்கும் நமது வந்தனம் உரித்தாகுக. புதுவருடத்திலும் அவர்களது ஆதரவும், அபிமானமும் தொடர்ந்து நீடித்திருக்க விரும்புகிறோம். பத்திரிகை பெற்றுவரும் அநேக அன்பர்கள் தங்கள் சந்தாவை இன்னும் அனுப்பாமலிருக்கிறார்கள். எமது பத்திரிகையை குறைந்த 8 அணா வருட சந்தாவில் நாங்கள் எவ்வித லாபத்தையும் கருதாது நடத்தி வருகிறோம் என்பதை யாவரும் அறிவர். இன்றய நிலையில் சந்தாதாரர்களேனும் காலாகாலத்தில் தங்கள் சந்தாவை அனுப்பி உதவினால் பேருபகாரமாயிருக்கும். அன்பர்கள் இதைக் கவனிப்பார்களாக.

வைத்திய முன்னேற்றமும், வளர்ச்சியும் கருதி வைத்திய சம்பந்தமான கட்டுரைகள் பல நம் பத்திரிகையில் இடம் பெறுகின்றன. ஆகையால் வைத்தியர்களும் இதை ஆதரித்துப் பயன்பெறும்படி வேண்டிக்கொள்கிறோம்.

ஆசிரியர்.

# "சேதுமணி"

(M. S. பாலசுப்பிரமணியம்.)

"சுந்தரம்! நானிதுவரையில்லாத இந்த வழக்கத்தை இனிக் கைக்கொள்ளவேண்டாமென்று நினைக்கின்றேன்."

"மணி! குடிப்பதனாலென்ன? குடி கெடுதியை விளைவிக்கும் என்பவர்களது கூற்றைக் கூறுகிறேன் கவனி. ஒரு நாள் தேசியத் தொண்டர்களென்று கூறிக்கொள்ளுமிடாக் குடியர்கள் எங்களையெல்லாம் குடிக்கக்கூடாது என்று கூறி மறியல் செய்துவிட்டு நாங்களெல்லோரும் போனபின்பு கடையிலிருந்த சரக்கு முழுவதையும் தாங்களேயருந்தினார்கள். எப்படி இவர்களது நடிப்பு?"

"நீ கூறுவது முழுவதும் பொய்யென்றே நான் நம்புகிறேன்."

"நான் கூறுவது பொய்யல்ல. அவர்களுக்குக் குடிக்க ஆசை கொடுத்துவிட்டது. நாங்களெல்லோரும் குடித்துவிட்டால், தாங்கள் குடிப்பதற்கு கள் இருக்காது என்று நினைத்து மறியல் செய்து கட்குடி கெட்டது என்று பொய்யுரைத்து உலகத்தையே மாற்றித் தாங்கள் வேணுமட்டுங் குடிக்கின்றனர். மணி! நீ இன்று கொஞ்சம் குடி. அதன் பின்பு உண்மை தெரியும். நிற்க, இது கள் அல்லவே! திராக்ஷாரஸமல்லவா? மேனாட்டார் இரத்த விர்த்திக்காக தினம் கணக்கற்ற பாட்டிலருந்துகின்றனரே! படித்தவனான உனக்கு அதிகம் கூறவேண்டியதில்லை."

"உனது வார்த்தைக்காக எனக்கு வெறுப்பான காரியத்தைச் செய்கின்றேன்" என்று கூறியவாறு பாட்டிலைக்

காலிசெய்தான் மணி? என்ன கொடுமை! நண்பர்கள் இப்படியும் செய்யலாமா? இவனைப்போன் (சுந்திரம்) றவர்களை நாம் நயனென்று கூறவேண்டுமேயன்றி நண்பனென்று கூறலாகாது. சுந்திரமும், மணியும் பள்ளி நண்பர்கள். மணி அவ்வூரிலுள்ள செல்வராஜு எனும் மிராசுதாருடைய அருமைப் புதல்வன். இவனுக்கு வயது இருபத்து மூன்று. இவனுக்கு இவ்வருஷந்தான் கலியாணமும் ஆயினது. இவன் தனக்கு நன்மையை நாடும் நண்பன் சுந்திரம் ஒருவனே என்று எண்ணியுள்ளான். காரணம் அவன் போடும் குள்ளநரி வேடமே! முதல் நாள் குடிக்க மறுத்த இவனுக்கு மறுநாள் குடிக்கவேணுமென்ற ஆசை யுண்டாயிற்று. ஆனால் சுந்திரம், நேற்று உபசரித்தவன் இன்று தான்மட்டும் அருந்தினான். பின் மணியை நோக்கி, "நீ நேற்று சாப்பிடுவதற்கே மிக கஷ்டப்பட்டாய்; ஆகையால், இன்று கொடுக்கவில்லை" என்று குறும்பாகக் கூறினான். இவைகளினால் மணியின் இதயத்தில் ஓர் போராட்டங் கிளம்பிற்று. அது என்னவென்றால், கேட்டு வாங்குவதா, வேண்டாமா என்பதே. கடைசியில் கேட்டு வாங்குவது என்ற நிலைக்கு வந்தான். பின் இருவரும் சேர்ந்து வேணுமட்டும் குடித்தனர். ஆ! என்ன கோரம்! தீங்கு பயக்குமென்று தெரிந்து, மறுத்த அவனே அதை விரும்புவதென்றால் மதுவின் சக்தியை நாமென்னவென்று கூறுவது? இப்பேர்ப்பட்ட வல்லமை அதனிட மிருக்கப்போயல்லவா நமது பாரத மக்கள் தங்கள் பணத்தையும், வாழ்நாட்களையும் அதற்குப் பலியிடுகின்றனர். இப்படி மாதம் ஆறு ஓடி விட்டன. மணி பெரிய குடிகாரன் [குடித்தனமல்ல, மதுபானத்திற்கடிமை] ஆய்விட்டான். செல்வராஜு இது சமயத்தில் நோயுற்றிருந்ததால், இவனது செய்கையை அறிய முடியவில்லை. ஆனால் சுந்திரம், மணியை இத்தீய பழக்கத்துடன் விடவில்லை. தாசிகளது இல்லத்திற்கும் பழக்கம் பண்ணிவிட்டான். மணி, தன்னை யடக்குவாரின்றி மிக கேவலமான இச்செய்கைகளை யெல்லாம் செய்து கொண்டிருந்தான். இவனது இந்நிலையைக்கண்ட பள்ளிநேசனான சேதுராமலிங்கமெனும் மாணவன், மணியை நல்வழியில் திருப்பவேண்டிப் பல நற்போதனைகளைச் செய்தான். இவைகளை மணி ஏற்றுக் கொள்ளாது சேதுவையும் வாயில் வந்தபடி திட்டி யனுப்பி



விட்டான். இவைகளினால் சேது மிக வருத்தமுற்று, "ஆ! எவ்வளவு மேன்மையான குடும்பம்? எவ்விதம் சீர் கேடான நிலையை யடைந்துவிட்டது. தனது புத்திரனது செய்கைகளையறியாது செல்வராஜு பிரபு இருக்கின்றார். நான் இதற்குச் சரியான முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும்" என்று எண்ணியவாறு சென்றான் அவன்.

ஒரு நாள் மணி கைவிலங்குகளுடன் போலீஸார் பாதுகாப்பில் சென்றுகொண்டிருந்தான். இதைக் கண்ணுற்ற சேது, காரணம் என்னவென்று விசாரித்ததில், மணி, மரகதமெனுந் தாசியைக் கொலை செய்ததாக வறிந்தான். இதைச் செவியேற்ற சேது ஸ்தம்பித்து விட்டான். பின் மணி கொலை செய்திருக்கமாட்டான் எனுந்திட நம்பிக்கை அவன் மனதிலுதித்தது. மணியின் வீட்டை யடைந்தான். மணியின் தந்தை இறந்து ஆண்டு ஒன்றாய் விட்டது. அங்கு மணியின் மனைவியான ரோஜபுல்லாபட்டு மிருந்தாள். அவளிடம் விஷயங்களைக் கூறி அவளையும் அழைத்துக்கொண்டு மாஜிஸ்ட்ரேட்டிடம் அனுமதிபெற்றுச்சிறையில் மணியைச் சந்தித்தனர். மணி போலீஸாருடன் வரும்போது குடிமயக்கத்திலிருந்ததால் ஒன்றையு மறியான். இப்போது அது தெளிந்து தனது நிலையையறிந்து காரணந்தெரியாது திகைத்துக்கொண்டிருந்தான். அச்சமயம் சேதுவும், ரோஜபுல்லாவும்வர, இவர்களது சூழ்ச்சியாய்த்தானிருக்குமென்று எண்ணிக் கோபத்துடன் திருப்பிக் கொண்டான். சேது அவனைப்பார்த்து, "மணி! நீ, கொலை செய்தது வாஸ்தவமா என்றான்.

"என்ன? கொலையா? நானா? எப்போது? யாரை?"

"நீ, மரகதத்தைக் கொலைசெய்ததாகச் சிறைப்பட்டுள்ளாய். நீ நேற்றுச் செய்த காரியங்களை யெல்லாம் ஒன்றுவிடாது கூறு."

"ஆம்! மோசம்! மோசம்! சேது! நான் சத்தியமாகக் கூறுகிறேன். நான் கொலை செய்யவேயில்லை. சுந்திரம் நேற்றுமாலை யென்னிடம்வந்து மரகதத்தைத் தொலைத்துவிடவேண்டுமென்று கூறினான். நான் எதற்கு என்று கேட்டேன். அவள் என்னிடமிருந்து அதிக பணம் பெற்றுவிட்டாள்; அதை அபகரிக்க என்று கூறினான். நான் முடியாது

என்றேன். என்னப்பா இப்படி கூறுகிறாய்; நானே கொலை செய்து உனக்கும் பங்கு தருகிறேன் என்றான். நான் ஒன்றுங் கூறவில்லை. பின் இருவரும் ஐந்தாறு பாட்டிலைக் காலி செய்தோம். ஆம், நான் நேற்றிரவு நாலு பாட்டில் குடித்தேன். சுந்திரம் என்னை நோக்கி நீ போதையிலிருக்கும் போதும் தவறாது கையெழுத்திடுவாயா என்றான். நான் செய்வேன் என்று கூறினேன். எங்கே பார்ப்போம் என்று கூறியவாறு ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில் என்னமோ எழுதியிருந்தது. நான் அடியில் கையெழுத்திட்டேன். பின்னும் இருவரும்குடித்தோம். எனக்கு மயக்கம் அதிகமாய் விடவே அப்படியே சாய்ந்தேன். என் மயக்கத்தினிடையில் மரகதம் ஐயோ என்று கூறியது கேட்டது. ஆனால் எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை. அப்போது மயங்கினவன் இப்போதுதான் தெளிவடைந்தேன். நான் போலீஸாருடன் வந்ததெல்லாம் கனவு போலிருக்கிறது. சேது! நான் இப்போது கூறியது முழுதும் உண்மை! சத்தியமாக நான் உண்மையைக் கூறி விட்டேன். நீ எப்படியாவது என்னைக் காப்பாற்று. நானிறப்பதற்கஞ்சவில்லை. என்மீது ஏற்பட்டிருக்கும் பொய்யான இந்தக் கரையை நீக்கு."

"நீ, கையெழுத்திட்ட கடிதத்தில் என்ன எழுதியிருந்தது என்பது தெரியாதோ?"

"தெரியவே தெரியாது."

"சரி! நீ இனிக் கவலைப்படாதே. நான் முயற்சியெடுத்து உண்மையைத் தெரிவித்து உன்னை விடுவிக்கின்றேன் என்று கூறிவிட்டு, ரொஜபுல்லாவை வீட்டிற்கு அனுப்பிவிட்டுத் தான் ஸப்இன்ஸ்பெக்டரிடம் போனான்."

"ஸார்! நீங்கள் இந்தக் கொலையாளியைப் பிடிப்பதற்கு முன் ஏதாவது தகவல் கிடைத்ததா?"

"நீரென்ன ஐயா கேட்பது? ஆனாலும் கூறுகிறேன். இவன் தன்னுடைய நண்பன் சுந்திரம் என்பவருக்கு கடிதமெழுதியிருக்கிறான். அவர் எவ்வளவோ தடுத்தும் கேளாததால் எங்கள் மூலம் அவன் கொலை செய்யாதிருக்கும்படி செய்ய அவனெழுதிய கடிதத்தைக்கொடுத்து விஷயங்களைச் சொன்னார். நாங்கள் போவதற்குள் இவன் வேலையை முடித்துவிட்டான். இப்போது சுந்திரம் மிகவருத்த முறு



கிறார். ஏனென்றால், தன் நண்பனைக் காட்டிக் கொடுத்து விட்டோமென்ற. இந்தாரும் அவனெழுதிய கடிதம்."

எனது பிரிய நண்ப,

"சுந்திரம்! நீ, தாசி வீட்டிற்குப் போனால் சொத்துகள் தொலைந்துவிடும் என்று கூறி நான் போவதைத் தடுக்க முயற்சித்தாயல்லவா? அது சுத்தத்தப்பிதம். எப்படியென்றால், நான் இன்று அவளைக் கொன்று விட்டு அவளது ரொக்க ஆஸ்திகளை யெல்லாம் கைப்பற்றப் போகிறேன். இப்போது உண்மை விளங்கிற்றா?"

உனது நண்பன்
மணி.

"ஸப் இன்ஸ்பெக்டரவர்களே! ஓர் சிறு விஷயம். மேலேயிருக்கும் எழுத்து இன்னவருடையதில்லை. அது சுந்திரம் எனும் வாலிபனுடையது. தாங்கள் போலீஸை விட்டு அவனை அழைத்துவந்து எழுத்தைச் சோதனைசெய்து திருப்தியான பின்பு தாங்கள் அவன் வீட்டை சோதனையிடுங்கள். அங்கு தாசி மரகதத்தின் நகைகளிருக்கும். இதை நான் சிறையிலிருப்பவர் வாய்மூலமாகவே யறிந்தேன். இவர் ஒருக்காலும் கொலை செய்யமாட்டார். இவர் இழிந்த செய்கைகளைச் செய்வதற்குக் காரணபூதம் இந்த சுந்திரமே. ஆகையால், நீங்கள் உண்மையையறிவதற்காக சுந்திரம் வீட்டுவரை வரவேண்டும்" என்றான். இன்ஸ்பெக்டரும், போலீஸும் சரியென்று ஒப்புக்கொண்டு சென்றனர். சுந்திரம் வீடு வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்தது. ஆனால், உள்ளே மனிதக்குரல் கேட்டது.. இன்ஸ்பெக்டர் ஒட்டுக்கேட்டார்.

"அம்மா! மணி இனித் தப்பமுடியாது சரியானபடி மாட்டிவிட்டேன். கடிதம் ஒன்றே போதும் அவனுக்கு. இந்த சேது அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கிறான். இவனையும், மரகதத்தைத் தொலைத்தது போல் தொலைத்து விட வேண்டும்" என்று கூறியது கேட்டது. உடனே இவர்கள் பின்புறவழியாக உள் நுழைந்து சுந்திரத்தையும், அவனது தாயையும் விலங்கிட்டழைத்துச் சென்றனர். விசாரணையில் தூக்குத்தண்டனை சுந்திரத்திற்குக் கிடைத்தது. அவனது தாய் அந்தமான் தீவிற்கனுப்பப்பட்டாள்.

# சினிமாவின் சீரழிவு.

(R. N. ராஜன்.)

குமுதம் தற்கால நாகரீகக் கொழுந்து. குமுதம் பச்சிளங்குழந்தைமுதல், வயோதிகர்வரை அமுதமாகவே விளங்கி வந்தாள். அவளது நீல மணிக்கண்களும், செவ்விதள் கூடிய வாயழகும், குழிகொண்ட கன்னமழகும், எப்பேர்ப்பட்டவரையும் மறக்கச்செய்யாது என்பது திண்ணம். நாகரீகக்கோலமே உயர்ந்த பதவியென்றும், நாகரீக உடைகொண்டவரே, உன்னதமனிதரென்றும் எண்ணும் சுபாவம் கொண்டவள்.

தன் தாய்க்கு ஏகபுத்திரியாய் இருப்பதுபோல் தன் மனத்திற்குத் தானே சர்வாதிகாரியாயிருந்தாள். தன் தாயிடமுள்ள பணத்தை இஷ்டம் போல் செலவழிப்பது போல் தன் புத்தியையும் இஷ்டம் போல் செலவழித்தாள். குமுதாவின் தாய் குணவல்லி தன் புத்திரிமீது பூண்டுள்ள அன்பால், அவளது இஷ்டம் போல் விட்டு விட்டாள்.

கலாசாலையில் படித்து வந்தாளே யெனினும், மாலை நேரங்களில் கடற்கரைக்கும், சினிமா, டிராமாவுக்கும் செல்வது சிறிதும் தவறாது. கடற்கரையில் மாலை 6-மணிவரையில் தன் சகாக்களுடன் கரத்துடன் கரம் சேர்த்து உலாவி வருவாள். பின், தங்கள் வீட்டு வண்டியிலேயே, சகாக்களுடன் சினிமா அல்லது டிராமாவுக்கும் சென்று வருவது பழக்கம். சினிமாக் காட்சியே தெய்வலோகக் காட்சியாக எண்ணி தனக்குப்பின்னால் ஏற்படும் இடையூறை அறவே மறந்திருந்தாள்.

ஒவ்வொரு தினமும் சினிமாவுக்குப் போய் வருவதால் சிலநண்பர்கள் அகப்பட்டார்கள். அவர்களது நாகரீகஉடையில்உழன்ற குமுதா மீளமுடியாதபடி ஆனந்தமெனஎண்ணி இரும்பூதெய்தி இருந்தாள். நாளாக, நாளாக, தனக்கு நேசமான மற்ற பெண்பிள்ளைகளின் வீட்டிற்குச்செல்லவும் அவர்களுடன் அன்னியோன்னியமாய்ப் பழகவும் ஏதுவாயிற்று.





பின் கலாசாலைமாணவிகளின் நட்பை மறந்து, சினிமாவில் சிநேகிதமான செல்வாம்பாளும், ஞானசேகரியும் உற்ற நண்பர்களானார்கள். அவர்களது கோண வகுடு பொருந்திய, இடுப்பு வரை தொங்கும் ஜடை அலங்காரத்திற்கும், கண்ணிற்பூட்டிய கண்ணாடிக்கும், முகத்திற்குப் பூசிய வாசனைமாவுக்கும், சிவப்புவர்ணம்கொண்ட சிவந்த அதரத்திற்கும், இன்னும் பலவித நவீன நாகரீகத்தை தத் சொரூபமாகக்கொண்ட கோலத்திற்கும் சம்பூரண அடிமையானாள்.

அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி செல்வதும், அவர்களுடன் சமமாக மேஜையின் மீதமர்ந்து உண்டிகொள்வதும், அவர்களைத் தன் வீட்டிற் கழைத்து வருவதுவும், தினே, தினே, வளர்ந்துகொண்டே வந்தன.

ஓர் நாள் மாலை, தோல்பையுடன் காலிலணிந்த லேடிஸ் ஷூவுடன் டக்டக் என்ற சப்தத்துடன் ஹல்லோ! மை! டியர், செல்வம்! வேர் — ஈஸ் யுவர்! யெங்கர் (ஆ! என்னுடைய அன்பான செல்வம் உமது இளைய தங்கை எங்கே,) என்று மிகக்குதூகலமாகக் கேட்டுக்கொண்டே உள்நுழைய இவள் திடுக்கிடும்படியான கண்காட்சியைக் கண்ணுற்றாள்.

அவ்விருபெண்மணிகளும் இரண்டு ஆடவருடன் ஆனந்தத்துடன் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமும், வெட்கமும், கிலேசமும் ஒருங்கே கொண்டாள்.

இவள் வருவதையறிந்த பெண்கள் இருவரும் திகைத்தனரே எனினும், மூத்தவளான செல்வம், கமான் கமான் மை டியர், குமுதம் எனச் சிரித்துக்கொண்டே கூறினாள். பின் வேடன் பின்னால் இழுத்து செல்லப்படும் மான்போல் நடந்து அம்மேஜையண்டை சென்றாள்.

நெற்றியைச்சுளித்து ஏதோ யோசித்துப்பின், குமுதா! இவர்களிருவரும் என்னுடைய சகோதரர்கள். இருவரும் பாம்பேயில் சினிமாவில் டைரக்டராக அமர்ந்திருக்கின்றனர். என்னுடைய 17-வது ஆண்டுவிழாவிற்கு இவர்களை அழைப்பித்தேன். இவர் பெயர் மாணிக்கம். உன்பக்கவில் நிற்பவர் மனமோகனன் எனக் கூறிவிட்டு, சற்றும் கூசாமல், மிக அன்போடு அண்ணா! இவளே, எங்களிரு

வரது உயிர்த்தோழி. எங்களையும்போல் இவளையும் பாவிக்கவேண்டும்; எனச் சாந்தமாகவும் உறுதி கொண்ட உருக்கமாகவும் கூறினாள் செல்வம்.

அவர்களுடைய நாகரீக உடைக்கும், நன்றாக வகுடு எடுத்த கிராப்பிற்கும், நேவிகட் சிகரட் புகைக்கும் தன் பேதை மனத்தைச் செல்ல விடுத்தாள்.

வாலிபர்கள் இருவரிலும் குமுதாவின் கடைக்கண்கள், மனமோகனனிடம் மோகமாகவே பாய்ந்தன. மனமோகனன் என்னும் வாலிபன் இவளது மேன்மையான அழகைக் கண்களால் பருகி ஆனந்தமடைந்தான். பின், குமுதா தன் மனதைத் தன் வசப்படுத்திக் கொண்டு, மிஸ். செல்வம், இன்று மாஸ்டர் செல்வராஜர் நடித்த சிறுகுயிலாம். தயவு செய்து நாம் போகவேண்டும் என்றாள்.

ஆகா! புறப்படலாம்; இன்று இவர்கள் வந்திருப்பதால் கண்டிப்பாகப் போகத்தான் வேண்டும்.

பின், அனைவரும் சிறுகுயில் என்னும் ஆட்டத்திற்குச் சென்றனர். அதிர்ஷ்ட வசமாக, குமுதாவினருகில் மனமோகனன் அமர்ந்துகொண்டான். உண்மையில் மனமோகனன் எவர் மனத்தையும் தன் மீது மோகம் செய்துகொள்ளச் செய்யும் சக்திகொண்டவன்; நாகரீக அலங்காரி குமுதாவின் மனதைக் கவரச்செய்தது ஆச்சரியமல்ல.

நிற்க, குமுதாவிற்கும் மனமோகனத்திற்கும் நிமிடத்திற்கு நிமிடம் அன்பு அதிகரித்துக்கொண்டே காதல் என்னும் இடத்தை யடைந்தது. குமுதாவின் மனத்தில், அவனது நாகரீக உடையும், மற்ற டாப்பீகத் தோற்றமும் ஆழ்ந்து பதிந்து விட்டதால், அவனையே பதியாகக் கொள்வது சிலாக்யமென்றும் கண்ணியமென்றும் கருதினாள். அவர்களது அன்பு சினிமாவில் ஆரம்பித்தது; செல்வாம்பாளின் இல்லத்தில் பயனடைய ஆரம்பித்தது. எப்படியெனில், செல்வத்திற்கும், ஞானசேகரிக்கும் தெரியாது தங்களது களங்கமற்ற காதலைத் தெரிவித்துக்கொண்டது மன்றி ஓர் பெண்ணிற் கணிகலமாகவுள்ள ஒப்பற்ற கற்பை அவனுக்கு தத்தம் செய்துகொடுத்தாள். உண்மையில், மற்ற பெண்களுக்கும் தெரிந்தும் தெரியாமலிருக்கக்கூடும்.



உலகில் கடவுளின் நிர்ணயப்படி, இவ்விரு இளங்காதலருக்கும், நடுவில் மூன்றாவது உயிர் தோன்ற ஆரம்பித்தது. வாசகர்களே குமுதம், தனது பதியினைத்தால், மந்தபுத்தியால் - அற்பசகவாசத்தால் அரிய - தூய கற்பை துணித்து எறிந்தாள். அந்தோ பாவம்!

தன்னிலைமையைத் தானறிந்த குமுதா! அவ்வாலிபனிடம், உள்ளத்தைக் கவர்ந்த உத்தமக்காதலரே! நம்முடைய அன்பு உயிர் மூலமாக எனக்குண்டாய்விட்டது. பிறர் அறியா முன் விரைவில் விவாகத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென மன்றாடினாள்.

உடனே, அவ்வாலிபன் புன்னகைகொண்டு, நேசக் குமுதா! நீ பிறரை நாடாவிடினும் தாசி குலத்திலுதித்த உன்னை வைசியகுலத்தினனாகிய நான் எப்படி மணம்செய்து கொள்வது என்றான். காராச்சியம்போன்ற வார்த்தைகளைச் செவியுற்று, திகைப்பும், பிரமிப்பு மடைந்து என்ன! என்ன! நான் தாசியா? நான் தாசியென்று யார் சொன்னது? எனக் கோபத்துடன் துடியாகக் கூறினாள்.

பெண்ணே! உன் மனதில் நீ தாசி யல்லாவிடினும் உன் சகோதரிகள் தாசியாயிருக்கிறார்களல்லவா? அவர்களையே நானும் மற்றொருவனும் வைப்பாகக்கொண்டிருந்தோம்.

பின் உன்னைக்கண்டதும் எனது உள்ள முருகவே, அவர்களிடம் 12,000 ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கி விட்டேன். அவர்களது 3-வது தங்கையாம் நீ என்றான். ஆகா! என்ன மோசத்திற்கு இலக்கானேன், பிறர் நகைக்க ஆளானேன்! ஊம் எனக்கூறிவிட்டு தன்முகத்தில் வெளுப்படைய கலவர எண்ணங்களைக் கொண்டாள். அப்படியானால் நண்பரே! என்னைப் பன்னீராயிரத்துக்கு விலைக்கு வாங்கினீரே! எப்பொழுதும் உமக்கு அடிமை தானே. அதிற் சந்தேகமில்லையே எனக் குழந்தைபோன்று கேட்டாள். பெண்ணே! உன் மீது நான் கொண்ட மோகம் தணிந்து விட்டது. உன்னை ஒருவன் விலைக்கு ............ ......ஆ! ஐயோ! கூறவேண்டாம். எனக்குத் தெரியும். நான் போகிறேன் என்று ஓர் அறைக்குள்சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டாள்.

இதை யெல்லாம், கதவினிடுக்கிலிருந்து கவனித்து வந்த தாசிப் பெண்களிருவரும் மிக்க கடூரமாக என்ன நீங்கள் சுத்த முட்டாள்த்தனமாக நடந்துகொண்டீர்கள்! எதற்காக எம்மைப்பற்றி..................அதேசமயம் அவ்வறையில் யாரோ தடாலென விழுஞ் சப்தம் கேட்டுக் கதவைத் திறக்க, பீதிகொண்ட முகத்துடன் சவமாகக்கிடந்தாள் நாகரீகக் குமுதா. அங்கு கிடந்த வைர மூக்குத்தி சின்னாபின்னமானதைக் கண்டு, வைரத்தைத் தின்று உயிர் விட்டதாகத் தெரிந்து கொண்டனர்.

பின் கடிதம் கிறுக்கலாக எழுதியிருந்தது.

முதற்கடிதம்:—

கேவலம் பணத்திற்கு உடம்பை விற்று கற்பைக் கரைத்த வேசிப் பெண்களே! உங்களது மௌடீகம் பொருந்திய நாகரீகத்தில் வீழ்ந்து உன் உண்மை யோக்கியதை யறியாது சிக்கிக்கொண்ட பலனை யடைந்தேன். நாகரீகத்தின் பயனையும் குலப்பெண்கள், அளவுக்குமீறிச் செய்யும் காரியத்தின் பலனையும் அடைந்தேன். என் பாப ஜென்மமது ஒழியட்டும். நீங்கள் செய்த பெரும்பாவத்தை- என்னைக்கெடுத்த பாவத்தை விரைவில் அடைவீர்கள். நிச்சயம். என் காதலர் ஆசை 60-நாள் மோகம் 30-நாள் என்றபடி பெண்களைக் கெடுத்துக் கொண்டே வருகிறார். என்று அவரது உண்மைத் தன்மையை யறிவரோ? தெரியவில்லை. ஆடு மாடு விற்பதுபோல் தன்னாசை நிறைவேறியதும் விற்கத்துணிந்தார். என் பதி யென்ற நீதியில் ஒன்றும் கூறேன். என் தாயாருக்கு பெரிய அபாக்யவதியானேன். அழிந்தேன் நாகரீகத்தால்; ஒழிந்தேன்; மதி யிழந்தேன். ஆ! நாகரீகமே............என்னே! நாகரீகச் சினிமா! என வரையப்பட்டிருந்தது.

---

## ஞாபகமிருக்கிறதா?

**1937**-ம் வருஷ ஜனவரி மீ நமது "சித்தன்" பத்திரிகைக்கு **3**-ம் ஆண்டு ஆரம்பமாகிறது. புது ஆண்டில், பெரிய சைஸில் - அதிக படங்களுடன் வெளிவரும். படிக்கத்தவறாதீர்கள்.

---

# கண்கள்.

(தென்னாப்பிரிகா – டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.)

கல்வியறிவு பரவப் பரவ ஜனங்களுடைய பார்வை (திருஷ்டி) கெட்டுக்கொண்டு வருகிறது. படிப்பானது கல்வியின் ஓர் முக்கிய அங்கமாயிருப்பதனாலும், புத்தகங்களின் எழுத்து சிறிதாகிக்கொண்டு வருவதனால் அதிகமாக உற்றுப்பார்க்க வேண்டியதனாலும், அதனால் பார்வை மந்தமாகிறது. கண் வைத்தியர்கள் மாணாக்கர்களுடைய கண்களைப் பரீட்சிக்கும்போது, பார்வை மழுங்கினவர்களுடைய தொகை மேல் வகுப்புகளில் படிப்பவர்களிற்றான் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் காணப்படுகிறது. கண்களைக் காப்பாற்றுவது எப்படி என்பது மாணாக்கர்களுக்கும், பல உபாத்தியாயர்களுக்கும் தெரிவதில்லை. இவ்விஷயத்தைப் பற்றிய நியமங்களை அலட்சியஞ் செய்யலாகாது.

திருஷ்டியானது கடவுளால் அளிக்கப்பட்ட ஓர் விலையில்லாப்பரிசாகும். அதைக் காப்பாற்றுவது நமது பவித்திரமான கடமையாகும். பார்வை மழுங்கும்வரையில் நமக்கு அதன் மகத்துவம் தெரிவதில்லை. முதல் முதற்கொண்டே சில நியமங்களைத் தவறாமல் நடத்திக்கொண்டால் திருஷ்டி கெடாமலிருப்பதற்கு உதவியாயிருக்கும். ஆதலால் சில அவசியமான யோசனையை இவ்விடத்தில் சொல்கிறேன்.

பள பளப்பான பொருள்களை அதிக நேரம் பார்க்கலாகாது. இந்த நியமத்தைச் சிறுவர்கள் எப்பொழுதும் அலட்சியப்படுத்துகிறார்கள். இருளிலிருந்து ஒருமிக்க அதிக வெளிச்சத்தில் வருவதும் நல்லதல்ல.

படிக்கும்பொழுது விளக்கினிடம் முதுகைத் திருப்பிக் கொண்டு உட்காரவேண்டும். விளக்கின்பிரகாசம் கண்களின் பேரில் விழாவண்ணம் புத்தகத்தின் பேரில் மாத்திரம் விழும்படி உட்கார வேண்டும். தனக்குப் பின்புறத்தில் இடது பக்கமாக விளக்கை வைப்பது உத்தமம்.

படிக்கும்பொழுது முதுகில் கூன் வரும்படி உட்காரலாகாது, நிமிர்ந்து உட்காரவேண்டும். படுத்துக்கொண்டு படிப்பது நலமன்று. கண்களின்பேரில் பிரகாசம் விழும் வண்ணம் படுக்கலாகாது.

வண்டி போய்க் கொண்டிருக்கும்பொழுது படிக்கும் வழக்கம் அநேகருக்கு இருக்கிறது. இவ்வழக்கம் அபாயகரமானது. வண்டியில் போய்க் கொண்டிருக்கும்பொழுது மனதை ரஞ்சிக்கச்செய்ய வேறுவழிகள் எத்தனையோ இருக்கின்றன. அந்த நேரத்தை சம்பாஷிப்பதில் கழிக்கவேண்டும். வண்டி போய்க் கொண்டிருக்கும் பொழுது மெல்லிய எழுத்துக்களுடைய புத்தகத்தைப் படிப்பதினால் கண்கள் மிகவும் கெடுகின்றன.

மந்தமான வெளிச்சத்தில் படிக்கலாகாது. போதுமான வெளிச்சமில்லாவிடில் புத்தகத்தைக்கண்களுக்கருகில்பிடிக்க வேண்டியதாயிருக்கின்றது. அதனால் திருஷ்டி மந்தப்படுகிறது. அதிக நேரம் படிக்கவேண்டியதாயிருந்தால், இடைவிடாமல் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கலாகாது. நடுநடுவில் தூரத்திலிருக்கும் ஏதாவது வஸ்துக்களைப்பார்க்க வேண்டும். இவ்வாறு செய்தால் கண்களுக்குச் சிரம பரிகாரமுண்டாகி, அதிகத் தொந்தரவில்லாமலிருக்கும்.

படிக்கும்பொழுது புத்தகத்தைக் கண்களுக்கு அதிக சமீபத்தில் பிடித்துக்கொள்ளவும் கூடாது. கண்களுக்குத் தொந்தரவு உண்டாகும்படி அதிக தூரத்திலும் பிடித்துக் கொள்ளலாகாது. சாதாரணமாய்ப் புத்தகத்தை 12 முதல் 14 அங்குல தூரத்தில் பிடித்துக் கொள்ளவேண்டும்.

பார்வை மழுங்கினால் கண்களுக்குக் கண்ணாடி தேவையாயிருக்கின்றது. சிலர் கண்ணாடி தேவையில்லாமலிருக்கும் பொழுது ஆசைக்காக உபயோகிக்கின்றனர். சிலர் தேவையாயிருந்தும் அதை அணிய வெட்கப்படுகின்றனர். இவ்விருதிறத்தாரும் நஷ்டமடைகின்றனர். காரணமின்றிக் கண்ணாடி உபயோகிக்கக் கூடாது. தேவையாயிருந்தால் அதை வாங்கவும் தாமதிக்கலாகாது. கண்கள் சரியாகத் தெரியாமல்போனதும் சிலர் வீட்டில் யாராவது உபயோகித்துக்கொண்டிருக்கும் கண்ணாடி தனக்குச் சரியாயிருக்கிறதா

(இதன் தொடர்ச்சி 589-ம் பக்கம் பார்க்கவும்.)

# ஒன்னூரம்மாள்.

## ஹைதர் அலியை எதிர்த்த ஆந்திர வீர மாது.

(பண்டிதை ரா. ரங்கநாயகி அம்மாள்.)

அஹல்யாபாய், ஜான்ஸி லக்ஷிமிபாய், சாந்த சுல்தானா முதலிய வீரமாதரின் சரிதைகளை நாம் படித்திருக்கிறோம். உலகப்பிரசித்தியானவர்களுடையகதைகளேநமக்கு ஆனந்தத்தைத் தருகின்றன. ஒன்னூரம்மாள், அவர்களைப் போல் பெரிய பெரிய ராஜ்ஜியங்களை ஆட்சி செய்யாவிட்டாலும் சில கிராமங்களையேனும் ஆண்டு வந்த ராணி. அவர்களைப்போல் பெரிய கோர யுத்தங்களில் கலந்து போர் புரியாவிடினும் சிறு சேனையுடன் போராடிய வீரப்பெண்மணி. இந்த ஒன்னூரம்மாள் கடப்பை ஜில்லாவில் திப்பாரெட்டி பாளையம்என்னும் கிராமத்தை அரசாண்ட நரசிம்மராயரின் மனைவியாவார். இவர் தம் கணவருக்கு எல்லா வகையிலும் உதவி புரிந்து புகழ் பெற்றிருந்தார். எப்பொழுதும் ஏழைகளிடம் அன்புடையவர். சிறிது காலம் கழித்து நரசிம்மராயர் இறந்துவிட்டார். கிராம பரிபாலனம் முழுதும் ஒன்னூரம்மாள் தலையில் விழுந்தது. கணவர் இறந்ததும் அவருடைய விரோதிகள் அந்த அம்மாள்மீது வீண்பழி சுமத்தி, இருக்கும் சில கிராமங்களையும் அபகரிக்கப் பார்த்தார்கள். தினந்தோறும் ஒன்னூரம்மாளின் கஷ்டங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன. ஒன்னூரம்மாள் எதிரிகளின் துன்பங்களிலிருந்து நீங்கியிருக்க திப்பாரெட்டிபாளையத்தில் ஒரு கோட்டையைக் கட்டினார். அப்பொழுதும் அவர் கஷ்டங்கள் ஒழிந்தபாடில்லை. மறுபடியும் அங்கிருந்து பதினைந்து மைல் தூரத்திலுள்ள சாகர்லாபாடு என்னும் கிராமத்திற்குச்சென்று அங்குள்ள குடிகளை எல்லாம் தம் வசப்படுத்திக்கொண்டு அங்கு ஓர்கோட்டையைக்கட்டிக்கொண்டு உற்சாகமாகத் தம் ஜமீனுக்கு யாதொரு கெடுதியும் வராமல்

பாதுகாத்து வந்தார். தமது பாதுகாப்பிற்காகச் சிறுசேனையையும் வைத்திருந்தார். விவசாயிகளுக்கு நீர்பாசன வசதிகளை எல்லாம் அதிகமாக ஏற்படுத்தி, அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமானார். நாளுக்கு நாள் நாடு முன்னேற்றமடைந்து வந்தது. அதைப் பார்த்து விரோதிகளுக்குச் சகிக்க முடியவில்லை. அவர்கள் தனியாக ஒன்னூரம்மாள் மீது படையெடுத்துச் சென்றால் வெற்றிபெற முடியாது என்று எண்ணிப்பிறருடைய சகாயத்துக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இச்சமயத்தில் ஹைதர்அலி மைசூர்மீது படையெடுக்க திப்பாரெட்டிபாளையத்தின் வழியாக தனது சேனைகளைத் திரட்டிக்கொண்டு வந்தார். திப்பாரெட்டிபாளையத்தில் ஒருநாள் முகாம்போட்டார்கள். அப்போது ஒன்னூரம்மாளின் எதிரிகள் அவர்மீது இல்லாத பொல்லாத பழிகளை எல்லாம் சுமத்தி, அவரிடம் அதிகதிரவியம் இருப்பதாக ஆசைமூட்டி ஹைதராலியின் மனதைத்திருப்பினார்கள். அதனால் ஹைதராலி அவுல்தாரை அனுப்பி ஒன்னூரம்மாளைப் பணம் கொடுக்கும்படி கேட்கச்சொன்னான். அவுல்தாரும் சாகர்லாபாடு சென்று ஒன்னூரம்மாளிடம் ஹைதராலி சொன்னதைத் தெரிவித்தான். அதைக்கேட்ட ஒன்னூரம்மாளுக்கு அளவுகடந்த கோபம் வந்தது. "பணம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை போ" வென்று கடிந்துகூறினாள். துஷ்டனாகிய அவுல்தார் அவர் கோபாவேசத்தைக் கண்டு பிரமித்து சாந்தமாக இரண்டு மூன்று தடவை பணம்கொடுக்குமாறு கேட்டான். ஒன்னூரம்மாள் சினந்து பேசினார். அப்பொழுது அவுல்தார் வாய்க்குவந்தபடி அவரைப்பேசினான். அதைக் கேட்டதும் சகிக்கமுடியாமல் கோபாவேசம் பூண்டு ஈட்டியால் அவனைக்குத்தி வீழ்த்தினார். இவ்விஷயத்தைக் கேள்விப்பட்ட ஹைதராலி உடனே தன் சேனையைத்திரட்டிக்கொண்டு சாகர்லாபாடு மீது படையெடுத்து வந்தான். ஒன்னூரம்மாளும் தனது சேனைகளைத் தயாராக இருக்கும்படி உத்தரவிட்டு கோட்டைக்கதவுகளை மூடிவிட்டார். மொகலாய சேனைகள் கோட்டைக்குத் தீ வைத்து விட்டார்கள். ஹைதராலி கோட்டைக் கதவுகளைத் திறக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். கோட்டை மதில்சுவர்களின் மீதிருந்து ஒன்னூரம்மாளின் படைகள் கற்களை எறிந்தும், எண்ணெ



யைக் காய்ச்சி அவர்களின் தலைமீது ஊற்றியும் மொகலாயர்களின் முயற்சிகளைப் பாழாக்கி வந்தார்கள். இருந்தாலும் சாகர்லாபாடு சேனைகளால் மொகலாயர்களைத் தாண்டிப்போக முடியவில்லை. ஹைதராலி கோட்டைக் கதவுகளைத் திறப்பதில் ஊக்கமாக வேலை செய்துகொண்டிருந்தான். ஒருநாள் முயற்சியில் கோட்டைக்கதவுகள் திறந்துகொண்டன. மொகலாயர்கள் அதிக உற்சாகத்துடன் கோட்டைக்குள் புகுந்தார்கள். கிடைத்தவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தினார்கள். ஒன்னூரம்மாளுக்கு வேறு விதியில்லாமல்போயிற்று. கத்தி, ஈட்டிகளை எடுத்துக்கொண்டு மொகலாயர்களிடையில் புகுந்து வீராவேசத்தோடு போர் புரிந்தார். அவருடைய வீரத்திற்கெதிரில் மொகலாயர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆயினும் பெரிய சேனையுடன் ஒரு பெண்பால் எவ்வளவு நேரம் போராட முடியும். அவர்களிடை அகப்பட்டுக்கொண்டாள். ஹைதராலி அவரைச் சின்னப்படுத்தி தன் இஷ்டம்போல் ஊர் முழுவதும் கொள்ளையடித்து ஒன்னூரம்மாளை நடுவழியில் வெட்டி வீழ்த்தினான். அன்று முதல் இன்றுவரை அவ்வூர்கள் பாழாய்க் கிடக்கின்றன. சாகர்லாபாடு, திப்பாரெட்டிபாளையங்களிலுள்ள கோட்டைகள் க்ஷீணதசை யடைந்து இருக்கின்றன. ஒன்னூரம்மாள் பூதஉடல் மறைந்தாலும் அவர் புகழுடம்பு இன்றும் விளங்குகின்றது.

("நவமணி")

---

வெகு சுகம்!

S. V. R.

பழனி விபூதி.

ஏஜண்டுகள் தேவை! தக்க கமிஷன் கொடுக்கப்படும்!

S. V. ராஜப்பா, மலைக்கோவில் மிராஸ், பழனி.

# தமாஷ் கடிதம்.

S. கோபாலன்.

---

முக்குருணிப் பிள்ளையார் அவர்கட்கு,

ஐயா,

முதலில் உமது உகாரச்சுழியைப் போடாததால் இக்கடிதத்தைப் பார்க்காமல் எறிந்து விடாதேயும். அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு நான் ஜவாப்தாரியல்ல.

நிற்க; தங்களை 'விக்னராஜா' என்று சொல்லுகிறார்கள். உமக்கு எதனால் அப்பெயர் வந்தபோதிலும் நீர் விக்கினங்களை உண்டாக்குவதில் ராஜாவாக ஆய்விட்டீர் என்று பொது ஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சந்திகளிலும் வீதிகளிலும் நீர் வசித்துக் கொண்டு போக்குவரவுக்கு இடைஞ்சல் செய்கிறீர். ஜனங்களுக்கும் வண்டிகளுக்கும் ஆபத்து உண்டாக்குகிறீர். நீர் மாத்திரம் பொது இடத்தை ஆக்ரமிக்கலாமா? உம்மைக் கேட்பதற்கு ஒரு மதுரைக் கமிஷனர் இல்லையா?

இரண்டாவதாக குளக்கரையிலும் அரசமரத்தடியிலும் உமக்கு என்ன வேலை? குளிக்க வருவோரையும் தண்ணீர் எடுப்போரையும் உமது கோவில் படிகளும், மர வேர்களும் தடுக்கி பிராண வேதனையை உண்டாக்குவதுடன் சிலசமயம் கால்களைக் காயப்படுத்துவதுடன் பற்களையும் உடைத்து விடுகின்றன. உமது மர இலைகள் தண்ணீரையும் நாசமாக்குகின்றன.

இன்னும், அவசர அவசரமாக மெயிலில் சேர்க்க கடிதம் எழுத ஆரம்பித்த தலைப்பிலேயே உமது "சுழி"யை கண்டிப்பாக தீர்வைபோல வசூலித்து விடுகிறீர். இதனால் எவ்வளவு அவசரமான நேரம் வீணாகி எழுதவேண்டிய விஷயத்தொடர்ச்சியையும் வராமல் தடைபடுத்துகின்றன என்று உமக்குத் தெரியுமா?





இக்காரணத்தினால்தான் ஆபீசுகளிலும், பரீக்ஷைகளிலும் விலாஸங்களிலும் உமது சுழியை (அதாவது உமது தீர்வையை) போடக்கூடாதென்று பகிஷ்கரிக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய "பூச்சு"ஐ அங்கே எல்லாம் காட்டுவது தானே?

நான்காவதாக சுபா சுபகாரியங்களிலும் நீர் அனாவசியமாக தலையிடுகிறீர். முதல்பூஜையையும் (தக்ஷிணையுடன்) தாம்பூலத்தையும் பெற்றுவிட்டு கிளம்பி விடுகிறீர்.

கடைசியாக, கோவிலுக்குச்சென்றாலும் உமதுதொல்லை விட்டபாடில்லை. அங்கேயும் வாசலில் உட்கார்ந்துகொண்டு, "போடு மூன்று குட்டு, மூன்று தோப்புக்கரணம்" என்று உமது தும்பிக்கையை வீசுகிறீர். உமது பெற்றோர்களைப் பார்க்கவந்தால் உமக்கென்ன மரியாதை கொடுக்கவேண்டும். "எனக்கு முதலில் மரியாதை செலுத்திவிடு" என்று தகப்பன்சாமியை (நீர் தான் உமது தம்பி அல்ல) ப்போல அதிகப் பிரசங்கித்தனமாக நடந்துகொள்கிறீர்.

இனிமேலும் நாங்கள் உங்களுடைய இடைஞ்சல்களைப் பொறுக்க முடியாதென்று இதனால் நன்றாய் அறியவும். இவ்வளவு நாள் செய்துவந்த கஷ்ட நிஷ்டூரங்களுக்கு உமமுடைய தகுந்த சமாதானத்தை எனக்கு 24-மணி நேரத்திற்குள் சமர்ப்பிக்காவிடில் (1) சர்வதேச சங்கம் அபிஸீனியாவைக் கை விட்டதுபோல நாங்களும் உம்மை கை விடுவோம். (2) தற்கால சீர்திருத்தப்படி உம்முடைய கோவில்களைத்தான் முதன்முதலாக ஹரிஜனங்களுக்கு திறந்து விடுவோம். (3) உம்மை "சுழி" யிலிருந்தும் டிஸ்மிஸ் செய்வோம். கண்டிப்பாய் அறியவும்.

இப்படிக்கு,
மோதகப்பிரியன்.

189935

# மாதர் பகுதி.

## ஆண் பெண் உரிமை.

(தோழர் A. B. ஆதித்தர்)

ஆண்களில் பெண் தன்மையுள்ளவர்களும், பெண்களில் ஆண் தன்மையுள்ளவர்களும் நாட்டிலிருந்து வந்தபோதிலும் இவர்கள் சிறுபான்மையோராகவே இருக்கிறார்கள். பெரும்பாலான ஆண்கள் தங்கள் ஆண் தன்மை விலகாதவர்களாகவும், பெரும்பான்மையான பெண்கள் தங்கள் பெண் தன்மை விலகாதவர்களாகவும் இருந்து வருவதால் வாழ்க்கையில் இருவகுப்பாருக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாத விதிகளை அமைப்பது கஷ்டமாகவே முடியும்.

2029-ம் வருடம் இங்கிலாந்தில் ஆணின் சரீரத்திலிருந்து சுக்கிலத்தையும், பெண்ணின் உடம்பிலிருந்து சுரோணிதத்தையும் எடுத்து ஒரு கண்ணாடிப் பாத்திரத்திலிட்டு செய்யவேண்டிய முறையின்படி செய்து குழந்தைகளை உற்பத்தி செய்து விடுவார்களாகையால் பிள்ளைப் பேறு வைத்திய சம்பந்தமாகவே அமையக் கூடுமென்றும், மனிதர்கள் ஒவ்வொரு நாளிலும் இரண்டு மணிநேரம் மூளைவேலை மாத்திரம் செய்துவிட்டு மீதநேரமெல்லாம் உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பார்களென்றும் மாஜி இந்தியா மந்திரி லார்டு பார்க்கென்ஹெட் சில வருஷங்களுக்குமுன் 1929-ம் வருடத்திலேயே ஒரு கட்டுரை எழுதிவெளியிட்டிருக்கிறார். அதை உண்மையாகச் செய்து காட்டும் காலத்தில்தான் ஆணும் பெண்ணும் யாதொரு வித்தியாசமுமில்லாத சமவுரிமையைப் பெறுதல் கூடும். அத்தகைய ஒரு காலம் வருமாகில் அக்காலத்தில் வாழும் மக்களின் ஒழுக்க நிலைமிகவும் சின்னபின்னமாகிவிடுமோவென்றும் சிந்தனையும் எழுகின்றது.

மனிதனுக்கும் மிருகத்துக்கும் ஆதிகாலந்தொட்டு ஒரு முக்கியமான வித்தியாசமிருந்து வருகிறது. மனிதன் இச்சா





போக சுகத்திற்குத் தொடர்ச்சியாகப் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டிருப்பதால்தான் அவன் மிருகத்தினின்றும் மேம்பட்டவனாகக் கருதப்படுகிறான். காலம் எப்படி மாறினும் கடந்த சக்தியானது ஒழுக்கத்தைக் காப்பாற்றி வருமாக.

இங்கிலாந்தில் விவாகமான ஸ்திரீ டாக்டர்கள் தங்கள் வீட்டுவேலை காரணமாகக்கூறி வெளிச்சென்றதினால் ஆஸ்பத்திரி வேலை அதிகம் பாதிக்கப்பட்டது. இப்பொழுது அங்கு "ஸ்திரீ டாக்டர்கள் விவாகம் செய்துகொள்ளவேண்டுமா?" என்பதைப் பற்றி சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. பர்மிங்காம் ஜெனரல் ஆஸ்பத்திரி அதிகாரிகள் அவர்கள் விவாகம் செய்துகொள்ளக் கூடாதென நினைக்கின்றனர். விவாகமான ஸ்திரீ டாக்டர்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு ஆஸ்பத்திரியின் காலத்தை வீணாக்குவார்களென்பது இந்த அதிகாரிகளின் பயம். 1930-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடந்த வருஷாந்திரக் கூட்டத்தில் விவாகமான ஸ்திரீகளை வைத்திய உத்தியோகத்திற்கு நியமிக்கக்கூடாதென்றும், வைத்திய உத்தியோகத்திலிருக்கும் ஸ்திரீகள் விவாகம் செய்துகொண்டால் வேலையை ராஜீநாமாச் செய்துவிடவேண்டுமென்றும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்குச் சாதகமாக 26-பேர்களும், பாதகமாக 16-பேர்களும் ஓட் செய்தனர்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியதென்ன? ஒரு பெண்ணானவள் ஆண் தன்மையோடு இருந்தபோதிலும் அவள் பிள்ளை பெற்றுக்கொண்டு இருக்குமட்டும் ஆணைப்போன்ற சரிசமநிகர்உரிமையைப்பெறவேமுடியாது. தற்காலம் பெண் சமத்துவம், பெண் சுதந்தரம் என்று பேசும் பலர், உரம்பெற்ற ஆண்செய்யக்கூடிய எல்லாவேலைகளையும் மிருதுவானபெண்களும்செய்யலாம் என்று நினைத்துவிடுகின்றனர். இது என்றும் கூடாத காரியம், "கொர்ப்பந்தான்மங்கையர்க்கழகுகுன்றும்" என்பதுவிவேகசிந்தாமணி.

ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லாமல் ஒரே வேலையைச் செய்துகொண்டிருக்க முடியுமென நினைக்கின்றவர் பெண்கள் பிள்ளை பெறுமலிருப்பதை விரும்புவராக இருக்கவேண்டும். ஏனெனில் பெண்ணானவள்

பிள்ளை உண்டாகாதவளாயிருப்பதன் மூலமே பூரண ஆண்தன்மையுடனிருந்து ஆண்களின் வேலையைச் செய்துகொண்டிருக்கமுடியும்.

பிள்ளைகள் பெண்கள் வயற்றில் உண்டாகாமலிருக்க ஒரு வழி கண்டுபிடிக்கும் வரைக்கும் இருபாலாரும் அவரவர் வேலையைச்செய்துகொண்டு சமத்துவமாக இருப்பதே நீதியும், தகுதியும் உள்ளதாகும், எனினும் ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்விதமான வித்தியாசமும் இருக்கக்கூடாதென்று நடந்துவரும் பிரசாரத்தை நான் வரவேற்கவே செய்வேன். ஏனெனில் அவ்வித தீவிர பிரசாரத்தினாலேயே மிருகத்தன்மையிலிருந்த பெண்கள் பெண்மைத் தன்மைக்கு வந்திருக்கின்றனர். பெண் தன்மையைப்பற்றிமட்டுமே பிரசாரம் செய்திருந்தால் அவர்கள் மிருகத்தன்மையிலிருந்து முன்னுக்கு வரப்போவதில்லை.

இவ்விதமான போக்கு நியாயமான பலன் தரக்கூடிய பிரசாரமாகுமேயன்றி யதார்த்த நிலையாகிவிடாதென்பதை நாம் உணரவேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமுமிருக்கக் கூடாதென்று எண்ணிக்கொண்டிருப்பது இயற்கையை மீறியதாகும். இயற்கையை மீறி அவ்வாறு எண்ணிக்கொண்டிருப்பதை செயலிற் காட்டவேண்டுமாயின் அவசியம் கர்ப்பத்தடை யநுஷ்டிக்க வேண்டும். குழந்தை ஆசையை விட்டுவிடவேண்டும். குழந்தைகளையும் பெற்று எடுத்துக்கொண்டு ஆணுரிமை பெண்ணுக்கும் உண்டு என்று சொல்வதால் அது எங்ஙனம் கைகூடும்? ஆணும், பெண்ணும் அவரவர் கடமையைச் செய்தால் குழந்தை ஆசையையும் அநுபவிக்கலாம்; சமத்துவமாகவும் நடக்கலாம்; சிலர் அதை அறிகின்றாரில்லை.

ஆணுரிமை கட்டாயம் பெண்களுக்கும் கொடுக்கப்படவேண்டுமென்பவர்களுக்கு 20—8—28 உ “குடிஅர”இல் ஈ. வெ. இராமன் எழுதிய “பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையிலிருந்து விடுதலையாகவேண்டும் என்கின்ற மார்க்கத்தைத் தவிர வேறு எந்த வகையிலும் அவர்களுக்கு விடுதலையில்லை” என்ற வாசகத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றியும் அவர்கள் ஆண்மையும், பலமுங்கொண்டு விளங்கவேண்டும். பெண் சமூகம் அதற்குத் தயாராயில்லை.



ஆகவே, ஆணுக்கு ஆணுரிமை இருப்பதுபோல் பெண்ணுக்குப்பெண்ணுரிமை தான் இருக்கவேண்டும். கணவனும் மனைவியும் எஜமானனாகவும், அடிமையாகவும், எஜமானியாகவும் அடியானாகவும், சிநேகித சிநேகிதியாகவும் சமத்துவமாக நடக்கவேண்டும்.

இது விஷயத்தில் அமெரிக்கப் பெரியாராகிய இங்கர்சால் இயம்பியதுதான் எனக்கு ஏற்றதாகத் தெரிகிறது. அவர் கூறியிருப்பதாவது:—

“ஒருவன் மகிழ்ச்சியாய் வாழ்வதற்குப் புகழுள்ளவனாயிருத்தல்வேண்டுமென்பது தேவையில்லை. ஏழையாயினும், செல்வனேயாயினும் உன்னுடைய மனைவியைப் பூங்கொடியாகக் கருது. அவள் தன் அன்பால் நிறைந்த மனத்தால் உன் உள்ளத்தைக் களிப்படையச் செய்வாள். காதலனும் காதலியும் ஒருமித்துவாழ்வரேல் அவர்கள் கண்பார்வையில் இருவரும் இளவயதுடையவராகவே தோற்றுவர். இவ்வின்பமே வீடு, முன்னேறுவதற்கு உரிமையும், ஓரே நிறையும், அன்பும் தேவை. இதுவே எனது நம்பிக்கையுமாகும்.”

இச்செம்மையான முறையில் வாழ்க்கை இருக்கவேண்டும். உண்மை இவ்வாறு இருந்தபோதிலும் நாட்டில்தோன்றியுள்ள கிளர்ச்சியின் முடிவறிய நாம் ஆவல் கொள்ளுகிறோம். பெண்ணுக்கு விடுதலை வேண்டுமென்பதாக அவர்களுக்கு ஆணுரிமையைக் கொடுப்பதில் வாழ்க்கை செம்மைப்படப்போவதில்லை. அது இயற்கையை மீறி ஆண் பெண் அல்லாத மூன்றாவதொரு இனத்தை சிருஷ்டிக்கப்போவதாகும். அதற்கு அவசியமும் வந்துவிடவில்லை. அது எவராலும் முடியப்போகிற காரியமாயுமில்லை.

“இந்திய ஸ்திரீகள் தேச விடுதலைப் போரில் கலந்திருந்தபோதிலும் தங்களுடைய இயற்கையான நாணம், அடக்கம் இவற்றை விடாமலிருப்பது குறிப்பிடத்தக்கது” என்று டாக்டர் ஸ்டான்லி ஜோன்ஸ் கூறியிருக்கிறார். இயற்கைச்சட்டமும் அவ்வாறே நடத்துகிறது.

இங்கிலாந்திலும் காலஞ்சென்ற 5-ம் ஜார்ஜ் அரசரின் பூத உடலடங்கிய பெட்டியைப்புதைப்பதற்காக 28-1-36-ல் துப்பாக்கி வண்டியில் வைத்து இழுத்துச் செல்லப்பட்ட

ஊர்வலத்தில் ஆண்களெல்லாம் நடந்து சென்றனர். ஜன நெருக்கம் சகிக்கமாட்டாமல் பெண்களெல்லாம் வண்டிகளில் ஊர்ந்தனர். அஃது அந்நாட்டில் பெண்கள் நிலைமையறிந்து அவர்களுக்கு ஆண்கள் செய்யும் நியாயமான மரியாதையுமாகும்.

எல்லாத்துறைகளிலும் ஸ்திரீகளுக்கு சமவுரிமை கொடுக்கவேண்டியது அவசியமானாலும் எத்தகைய ஆதிக்கமும் அறவே ஒழிய வேண்டும். அதாவது அரசிகளாகவோ, கவியரசிகளாகவோ, வீரர்களாகவோ விளங்கும் சிற்சில ஸ்திரீகளைத்தவிர பொதுவாக சாதாரணஸ்திரீகள் ஆரோக்யமான இல்லற தர்மத்திற்கே இடையூறு விளையும்படி ஆடம்பரமான பொதுஜன வாழ்விலோ, உத்தியோகங்களிலோ அமர வேண்டிய அவசியமில்லை.

ஆடவர்கள் எக்காரியத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனரோ அக்காரியத்தில் அவர்களுடன் ஸ்திரீகள் போட்டிபோட்டால் தங்களுக்குரிய உயரிய வாழ்க்கையை அவர்கள் தவிர்க்கவேண்டியிருக்கும். ஸ்திரீகள் மந்திரிகளாகவும், அழகும், அன்பும் வாய்ந்த தேவதைகளாகவும் கருதப்படுகின்றனர். ஒருவர் எவ்வளவுதான் விரும்பினாலும் ஆடவரும் ஸ்திரீகளும் ஒரு நாளும் சமமாக முடியாது. இவர்கள் ஒருவருக்கொருவர் பிறருக்கு அனுகுணமாகவே இருக்கமுடியும். ஸ்திரீகள் ஆடவரது நிலைமையை வகிக்கமுடியுமென நினைத்தால் அவர்களுக்கு அதைவிடப்பெரிய ஏமாற்றம் வேறெதுவுமில்லை.

பெண்களில் ஆண் தன்மையுள்ளவர்களுக்கு ஆணுரிமையைக் கொடுப்பதில் எமக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அந்த ஆண் தன்மையுள்ள பெண்கள் கர்ப்பமுடனும், கைக்குழந்தையுடனும் இருந்துகொண்டு ஆணுரிமையைப் பெறமுடியாது எனக்கூறுகிறேன். ஆண்களைப் பெற்றவர்களும் பெண்கள்தான். **தாய்க்குப்பின் தாரம்:**— அந்தப்பெருமை அவர்களுக்குண்டு, உண்டு.

ஸ்ரீ ஆர்னல்டு பென்னட்டு கூறிய பிரகாரம், "இயற்கையைமீறி எவ்வித கிளர்ச்சி நடந்தாலும் ஆண் பெண் எல்லைகள் அழிவடையாமலே இருந்துவரும்." பெண்களுக்கு



இதுகாறும் அந்த எல்லைமறைவாக இருந்தது; இப்பொழுது அந்த எல்லையைப்பார்க்க அவர்களுக்கு வசதி வாய்த்திருக்கிறது. ஆனால் அதைத் தாண்டிவிட அவர்களால் முடியாது. பெண்களும், ஆண்களும் ஒருவரைவிட ஒருவர் மேலானவர்கள் என்று எண்ணக்கூடாது. பெண்களும் ஆண்களும் தோழர்களைப்போல் ஐக்கியப்பட்டு வாழும் காலம் வரும். அது இன்றோ நாளையோ அல்ல எனினும் இத்தனை வருடங்களுக்குப் பின்வரும் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. அந்த நற்காலம் வரும் என்பதுமட்டும் நிச்சயம்.

"இந்திய வாலிபன்"

மாதம் இருமுறை வெளிவரும்
**ஓர் சிறந்த தேசீய தமிழ் மாதப் பத்திரிகை.**

பல அறிஞர்களின் கட்டுரைகள், அரசியல் விஷயங்கள், உலகவிசேஷங்கள் நிறைந்து விளங்குவது.

தனிப்பிரதி ஆறு பைசா. வருட சந்தா 1—4—0.

இந்திய வாலிபன் ஆபீஸ், துறையூர்.

நீங்கள் இதைப்படித்ததுண்டா?



மனச்சாந்தியும், அன்பும், ஒழுக்கமும் அடைய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம்

மார்க்க அரேலியர்

ஆத்ம சிந்தனை

பிரதி 1-க்கு விலை அணா 8

கிடைக்குமிடம்:—

மானேஜர், "சித்தன்" பழனி. S. I.

# இது வன்றோ
# ஆதாயம்!

உங்கள் வியாதிகளுக்குக் கண்டகண்ட மருந்துகளை வாங்கி - பணத்தை விரையஞ் செய்யாமல் "சி.எம். சாமி மருந்துகள் உத்தமமானவை" என்பதையறிந்து, வியாதிக்கேற்ற மருந்தை வாங்கி உட்கொண்டு சுகம் பெறுங்கள்; இனி வேறு மருந்து வாங்கிச் சாப்பிட வேண்டிய அவசியமில்லை —

## இதனால் உங்களுக்கு ஆதாயமன்றோ!

எத்தனையோ பேர் எவ்வளவோ பணம் செலவு செய்தும், வியாதி நீங்கினபாடில்லையே — காரணம் என்ன? "யாரிடத்தில் நல்ல மருந்துகளிருக்கின்றன" வென்பதை அறியாததால்தான். இதையறியாதவரையில் அவர்கள் கஷ்டப்படவேண்டியதாயிருக்கிறது.

நீங்கள்

## சி. எம். சாமி மருந்துகளுக்கு

**ஆர்டர் செய்யுங்கள்.**

பரம்பரையாய்த் தொடர்ந்துவரும் வியாதியானாலும், பல வருஷங்களாய் உங்கள் உடலிலிருந்து பல உபத்திரவங்களைப் புரிந்துகொண்டிருக்கும் வியாதியானாலும், மேக சம்பந்தமான வியாதியானாலும், காசரோகமானாலும், இன்னும் எப்படிப்பட்டவியாதியானாலும் கண்டிப்பாய்க் குணமாகும்.

**எங்களிடத்தில் தீராத வியாதி**
**வேறு எவ்விடத்திலும் தீருவது கஷ்டம்.**

**ஒரு முறை ஆர்டர் செய்யுங்கள்.**

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி. S. I.**




("விரபாரத்" என்னும் ஹிந்தி பேசும் படத்தில் ஓர் காட்சி.)

# மதிப்புரை.

189935

ஸ்கேலிடன்.

இக்காலத்தில் யார்யார் எவ்வித நூலோ, புத்தகமோ, காவியமோ, நாடகமோ, அல்லது பாடல்களோ இயற்றும் போது அதற்கு லட்டுருண்டையில் முந்திரிக்கொட்டை முன்னால் வந்துவிடுவதுபோல் ஓர் மதிப்புரையும் முன் பக்கத்தில முளைத்துவிடுகிறது. எழுதப்பட்ட விஷயத்தை நன்கு கவனித்து யாதாம் ஒரு தகுந்த வாசகர் தம் அபிப்பிராயத்தை வெளியிடுவதுதான் மதிப்புரை யெனப்படும். எனவே, இவ்வித மதிப்புரைகளால் ஓரளவு நன்மையுண்டாயினும் சில பொருத்த மற்ற பிரமுகர்கள் மதிப்புரைகளை வாரி வாரித் தானம் பண்ண முன் வருவதுதான் மிகவும் வெட்கக்கேடான விஷயமாகும். உதாரணமாக ரசாயன சாஸ்திர சம்பந்தமான நூல் ஒன்றையாவது அல்லது சுகாதார சம்பந்தமான நூல் ஒன்றையாவது புதிதாய் ஒருவர் வெளியிடுங்காலையில் (M. L C.) சட்டசபைமெம்பர் என்ற ஹோதாவிலாவது அல்லது (Retired Dt. Judge) ரிட்டையர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் என்ற ஹோதாவிலாவது ஓர் கௌரவ அதிகாரி அந்நூல்களுக்கு மதிப்புரை எழுதினால் எவ்வளவு அழகாயிருக்கும்? நீங்களே கூறுங்கள்; மேலும், ஹிந்தியிலோ, தமிழிலோ, தெலுங்கிலோ அன்றி வேறெந்த சுதேச பாஷையிலோ யாதாம் ஓர் நாவல், நாடகம் அல்லது காவியம் எழுதப்பட்டு அதற்கு மேன்மைதங்கிய வைசிராய் பிரபுவாவது அல்லது கவர்னர் பிரபுவாவது மதிப்புரை எழுதிவிட்டால் நீங்களும் நானும் வயிற்றிலடித்துக் கொண்டென் செய்வது?

இதையொட்டியே நானும் சிலநூல்களுக்கு மதிப்புரைகள் எழுதத்துணிந்துளேன். சரியென்றால் கொள்ளுங்கள்; இல்லாவிடில் தள்ளுங்கள்.

முதன்முதலாக, தமிழ்மறையெனப்படும் திருக்குறளை நோக்குவோம். (தமிழ்ப் புலவர்கள் தயவுசெய்து இருந்த இடத்திலேயே இருப்பார்களாக). இவ்வாயுரை வாழ்த்து பற்றி 40, 50 புலவர்கள் திருவள்ளுவ மாலையின் வாயிலாக தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளார்கள். அதில் ஒரு புலவர்:

" ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்தபின்—போயொருத்தர்
வாய் கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய் வீற்றிருக்கலாம்" என்று ஓங்கியடித்து விட்டார்.

எனவே இம்முப்பாலினுள் லௌகீக சம்பந்தமான சகல விஷயங்களும் அடக்கமென்பதே அவரது அபிப்பிராயம் என்று தெரிகிறது. இது சுத்தப்பொய் என்பதே எனது தாழ்ந்த அபிப்பிராயமாகும். எவ்வாறெனில் அறம், பொருள், இன்பத்தை 1330 குறளடிகளில் பாடினாரெனினும் சிசுவிவாகம், மறுவிவாகம், தீண்டாமை, அந்நியராட்சி முதலிய முக்யமான விஷயங்களைப்பற்றி ஒரு வார்த்தையாவது இவர் கூறினாரில்லை. மதுபானத்தைப்பற்றி ஒருவாறு எழுதி எப்படியோ தப்பித்துக்கொண்டு விட்டார். மேலும், இவர் ஓரிடத்தில்:

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்
றைம்புலத்தார் ஓம்பல் தலை" எனச்சொல்லுகிறார்.

அதாவது ஒரு குடும்பஸ்தனால் கவனிக்கப்பட வேண்டியவர்கள், மாண்டுபோன நம் மாதுர் பிதுர்க்களும், தெய்வமும், விருந்தினரும், சுற்றத்தாரும், தானும் என ஐவராம். இதை நியாயம் என நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? நெஞ்சில் கையை வைத்துக் கூறுங்கள். முதலில் தன்னைக்கவனித்துக் கொண்டு பிறகு உறவினரையும், விருந்தினரையும் கவனித்தால் போதாதா? அந்தோ! இற்றைய வேலையில்லாத்திண்டாட்டமெல்லாம் இவர் சிந்தையில் தோன்றவில்லைபோலும். இவ்வாறாக, காமத்துப்பாலில் இவர் வீண்காலம்போக்கிவிட்டார். இதற்குப்பதிலாக, ஆலயப்பிரவேசம், நைராட்டினம், சுதேசியம், பழையசாதம், கர்ப்பத்தடை இவைகளைப்பற்றி எழுதியிருந்தால் எவ்வளவோ நலமாயிருந்திருக்கும்.



**அடுத்தது கம்பராமாயணம்.** கம்பர் என்னவோ கவியில் ராஜாதான்; மகாராஜாதான்; சக்கரவர்த்திதான்; சர்வாதிகாரிதான்: ஆயினும், ஒரு புருஷன் பெண்சாதியின் ஜீவிய சரித்திரத்திற்காக வேண்டி 10,000 கவிகள் இவரை யார் இயற்றச்சொன்னது? தன் பெண்சாதியை இராவணன் தூக்கிச்செல்ல இராமன் சண்டை போட்டு அவளை மீட்டினான். இதை வழவழா கொழகொழா வென்று எழுதினால் சுமார் 10, 15 மாதங்கள் வரை ஓயாது மூளையைப் புண்படுத்திக்கொண்டு வாசிக்க யாரால் முடியும்? நமக்கெல்லாம் வேறு வேலையில்லையா என்ன? தவிரவும் இவர் நிரந்தரம் ஆகாயக் கோட்டையே கட்டி முடித்திருக்கிறார். அதிலும், தமிழோ கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டமாதிரி. ஆனால், இவர் " ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண் " ணுள்ள பேர்வழிபோலிருக்கிறது. மேற்கூறிய ராமாயணத்தில்இவர்

" குகனொடும் ஐவரானேம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம் எம்முறை அன்பின்வந்த
அகனமர் காதல் ஐய நின்னொடும் எழுவரானேம்
புகலருங் கானந்தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை."

என்று பாடியிருப்பதிலிருந்து ஜாதி வித்தியாசம் பாராட்டாத சு. ம. கோஷ்டியில் சேர்ந்தவராகவும் காணப்படுகிறது. இவர்மட்டும் சில ஆயிரங் கவிகளைச்சுருக்கி கதையை முடித்துவிட்டு இமயமலை, வங்காளக்குடாக்கடல், அராபிக் கடல் முதலியவற்றைப் பற்றிப் பாடியிருக்கலாம். அல்லது மேட்டூர்த் திட்டம், பைக்காராத் திட்டம், கம்பியில்லாத் தந்தி, ஆகாசவசனி முதலிய அரிய பெரிய விஷயங்களில் தன் மூளையைச் செலவிட்டிருக்கலாம் அதுவன்றி " தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதுபோல்" இவர் இராம கதையிலேயே தன் வாணாளை வீணாளாகக் கழித்ததுமன்றி கம்பராமாயணப் புலவர்களையும், பண்டிதர்களையும் மாதம் ரூ. 35-க்குத் தாளம் போட விட்டிருப்பது இவரது துரோகச்செயலன்றோ? மேலும், புராணக் கோட்டைக்கு அஸ்திவாரம் நாட்டிய பாவமும் இவரையே சாரும். ஆயினும், இவரது விடாமுயற்சி புகழுக்குரியது.

இனி நாலாயிர திவ்ய பிரபந்தத்தைக் கவனிப்போம். இது சர்க்கரைப்பொங்கலை முன்னிட்டு, கல்லையும், மண்ணையும், நீரையும், காற்றையும் பற்றியே திருப்பித் திருப்பி உளறிக் கொட்டப்பட்ட சமாச்சாரம். ஆனால், விஞ்ஞானத்துக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இதனால் தான் தென்கலை வடகலை விவகாரங்கள் இப்பொழுதும் நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. இதற்குப் பதிலாக இவர் உடற்கூற்றுவண்ணம், சமபந்தி போஜனம், கலப்புமணம், சம உரிமை இவைகளைப்பற்றிப் பாடியிருந்தால் சுகமாயிருந்திருக்கும். எனினும், இவர் இசைச்சுவை போற்றத்தக்கது.

அன்பர்களே! இப்போது என் மதிப்புரைகளில் சிலவற்றை நீங்கள் மாதிரி பார்த்து விட்டீர்கள். ஆதலால், உங்கள் கைவசமிருக்கும் அல்லது நீங்கள் விரும்பும் நூல்களையோ, புத்தகங்களையோ தைரியமிருந்தால் நமக்கு அனுப்பிவையுங்கள். மதிப்புரை எழுதிக்கொடுக்கிறேன். பயப்படவேண்டாம்.

---


## "சுசீலா"

### சுகந்த வாசனைத் தைலம்.

நூதன முறைப்படி தயாரிக்கப்பட்டது.
ரோமம் உதிர்தல், தலையில் பொடுகு உண்டாகுதல்
முதலியவைகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.
புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

1. K.S. ராமனாத அய்யர் ஹோட்டல், பழனி.
2. சென்ட்ரல் லஞ்ச் ஹோம், பழனி.
3. பீம விலாஸ், அடிவாரம், பழனி.


## அகத்தியர்
# குணவாகடம் 3000.

(சாமி, விருதை, சிவஞான யோகிகள்)

---

(541-ம் பக்கத்தொடர்ச்சி.)

மிதக்குமடா வயிறுதான் மத்தளத்தைப் போல
    மிருசப்த மிடுமடா வியாதி யோர்க்கு
சதித்துவிடும் நீரதுதான் வயிற்றுக் குள்ளே
    சதிராக இரண்டுமுதல் பத்துப்படி உண்டு
கதித்துவரும் இந்தநோய் தீர வேண்டி
    கனமான நீர்ப்பேதிக் கீவா யானால்
குதித்துமே போகுமடா இந்த நோய்தான்
    குணமாக இன்னம்வேறு விதங்க ளுண்டே. (246)

### கணை ரோகம்.

உண்டான கணைரோகம் சொல்லக் கேளாய்
    உத்தமனே மணிக்குடலி லிருக்கின்ற தோர்
கண்டான ரோகத்தின் வியாதிக்குத் தான்
    கலமான கணைரோகம் என்று பேராம்
திண்டான உதிரச்சய மென்றே சொல்வாய்
    தீங்கிலா மணிக்குட லின்வென் பதனில்
செண்டாகக் கிரந்தியது சரித்துப் பின்பு
    சொரூபத்தை மாற்றிவிடும் பால ருக்கே. (247)

பாலருக்குக் குடல்வழியாய் போகு கின்ற
    பலமான ரசவாக்கினிக் குடலடைத்துக் கொண்டு
காலன்வந்து பிடிப்பதுபோல் பொரிக்காட் டாமல்
    கனமான அன்னரசம் தனியாய்த் திரும்

மாலவனே கோளங்கள் சிலருக்குத் தான்
மகவாகப் பெருத்துமே கல்லுப் போலும்
சிலமுடன் சிலருக்கு மிருது வாயும்
சிறப்பாகப் பலருக்கு இந்நோய் காணும். (248)

காணுகின்ற குறியதனைச் சொல்லக் கேளாய்
கருவான குழந்தைகள் தான் கால்முடக்கிக் கொண்டு
பூணுகின்ற வயிற்றோடு அணைத்துக் கொள்ளும்
புகழான உதடிரண்டும் சிவந்து காட்டும்
வாணிபேசும் வாயோரம் புண்களுண்டாம்
வகையான உதடெல்லாம் வெடிப்புக் காணும்
நாணிநிற்கும் மலங்கள் தான் நிறமில் லாமல்
நலமான பேதியுந்தானாகும் பாரே. (249)

பாரடா மலங்கெட்டுத் தூர்வாடை தோன்றும்
பலமான வயிறுபெருத்துப் பிகுவாய்த் தோன்றும்
கூறடா அன்னரசம் சரியாய்ச் செல்லாததாலே
குணமான சரீரந்தான் உணர்ந்து போகும்
தேரடா இரேகந்தான் வெளுத்துக் காட்டும்
தெளிவான பலவீனம் அதிகமாகும்
நார்போலக் குழந்தைகள் தான் இளைத்துப்போகும்
நமனார்க்கு உயிர்கொடுப்பான் என்று சொல்லே. (250)

## மூத்திரக் குண்டிக்காய் நோவு.

சொல்லுகிறேன் மூத்திரப்பை வியாதி தன்னை
சுருக்குடனே நீயறிவாய் சுகம தாக
அல்லுவேன் இந்நோய்க்குக் காரணமே தென்னில்
அதிகமாய்க் குளிரதிலே செல்வதாலும்
கொல்லுகின்ற மூத்திரப்பை தனிலே அய்யா
குடிகெடுத்த கல்லுகள் உண்டாவதாலும்
மல்லுடனே அடிபடுதல் மருந்தி னாலும்
மகத்தான உஷ்ணமருந் தருந்தில் வருமே. (251)

(தொடரும்.)


## புடவையிலும் ஓர் புதுமை.

"ஹீரா பட்டுப் புடவை"

அசல் பட்டு. சலவைக்கு நேர்த்தியானது.
உன்னதமான பூக்கரைகள். சம்மியமான ரகம்.
கிடைக்கக்கூடிய கலர்கள்:— தூய்ய வெள்ளை, கிரீம் பிஸ்கத், ஆரஞ்சு, லவண்டர், சத்திரிப்பூ, சிலேட் முதலிய பல கலர்கள்.

10-முழம் நீளம் 2½-அகலம் புடவை 1-க்கு ரூ. 2-8-0.
12-முழம் நீளம் ,, ,, ,, 2-15-0

"சுபாஸ் பட்டு அங்கவஸ்திரம்"

அசல் பட்டு. அழகிய சிறு கரை. சலவைக்கு நேர்த்தி.
5-முழம் நீளம் 2½-அகலம் பட்டு 1-க்கு ரூ. 1-12-0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.


## கண்கள்.

(570-ம் பக்கத்தொடர்ச்சி.)

என்று பார்க்கின்றனர். அது சரியாயிருப்பதாகத் தோன்றி விட்டால் அதை வைத்துக்கொண்டே காரியத்தைநடத்திக் கொண்டு போகின்றனர். இவ்வாறு செய்வது நல்லதன்று. காரணம், இதனால் கண்கள் கெடுகின்றன.

கண்களின் அமைப்பு எப்படி இருக்கின்றதென்பது தெரிந்தால் கண்களைப்பற்றி எப்படி கவலை எடுத்துக்கொள்வதென்பதை அறிவது எளிதாயிருக்கும். கண்களின் அமைப்பில் சிருஷ்டி கர்த்தாவின் வல்லமை காணப்படுகிறது. ஆனால் கண்களின் அமைப்பைப்பற்றி வர்ணிப்பது நல்ல வல்லமையுள்ள டாக்டரால் முடிகிறகாரியமேயன்றி என்னைப் போன்றவர்களுக்கு சாத்தியமல்ல. மேலே கூறியிருக்கும் யோசனைகளைத் தழுவி நடந்தால் சாதாரணமாக மனிதர்களுக்கு அதிக நன்மையும் லாபமும் உண்டாகுமென்று நம்புகிறேன்.

## உங்களுக்கு தேவையா!

**சரீர மர்ம சாஸ்திரம்:—** இது ஆண் பெண் இரு பாலரும் படிக்கவேண்டிய நூல். 216 பக்கங்களுடையது. விலை ரூ. 1—0—0.

**கர்ப்ப சாஸ்திரம்:—** மருத்துவம் பார்க்கவேண்டியவர்களுக்குத் தேவையானது. விலை ரூ. 1—8—0.

**கந்த கானாமுதம்:—** சங்கீதாபிமானிகளுக்கு ஓர் அரிய பொக்கிஷம். விலை ரூ. 2—0—0.

**ஜோர்குன் குண்டு:—** ஓர் இருதாரத்தின் கேடுகளை விவரிக்கும் துப்பறியும் நாடகம். விலை. அணா 4.

**சோதிட ஆசிரியன்:—** சோதிடம் கற்கும் சுலபமான வழிகளுடன் எழுதியது. விலை ரூ. 1—0—0.

**புலிப்பாணி முனிவர் வைத்தியம்:— 5000** - மூலமும் உரையும் அடங்கியது. விலை அணா 12.

**ஆங்கில போதகன்:—** 60 நாட்களில் இங்கிலீஷ் கற்க முடியும். (காலிகோ பைண்டு) விலை ரூ. 2—0—0.

**கர்ப்ப ஆட்சி:—** கர்ப்பத் தடையைப் பற்றி ஆராய்வோர்க்கு வேண்டியது. விலை அணா 6.

**மரணத்திற்குப்பின் ஜீவன் உண்டா —** விலை அணா 4.

(தபால் கூலி வேறு.)

**தாகூர் அண்டு கம்பெனி,**
புத்தக வியாபாரிகள், புதுச்சேரி.

## இனாம்! இனாம்!!

உயர்ந்த முறையில் தயாரித்த
அருமையான மருந்துகள் அடங்கிய

**கிரய ஜாப்தாவிற்கு எழுதுங்கள்.**

எப்படிப்பட்ட வியாதியாயினும் எளிதில் குணப்படுத்தத்தக்க மருந்துகளைக் காண்பீர்கள்.

**மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.**

# மூலிகைப் பகுதி.

## அதிமதுரம் அதன் உபயோகங்கள்.

எட்டயாபுரம் டாக்டர் எஸ். வீ. சின்னப்பர் அவர்களால் இயற்றிய "சிகிச்சாசாரம்" என்ற நூலிலுள்ள விஷயங்களிலொன்று — காபிரைட்.

**அதிமதுரம்:—** இது கடைச் சரக்கு. அரேபியா, பெர்ஷியா, ஆப்கானிஸ்தானம், டர்க்கி, பஞ்சாப், பெஷவார் பிரதேசங்களிலிருந்து, வர்த்தகத்திற்கு அனுப்பப்படுகிறது. இவ்வேர் வெளிப்புறம் அழுக்கு நிறமாகவும், உடைத்தால் உள்ளே மஞ்சள் நிறமாகவும் நார்த்தன்மையாகவுமிருக்கும். இனிமையான உருசியுள்ளது. நம் நாட்டில் உற்பத்தியாகும் வெள்ளைக் குன்றிமணியின் வேரும், சகலவிதத்திலும் இதற்கு ஒத்ததாகவே யிருக்கிறது.

அடங்கியுள்ள **தத்துவங்கள்:—** வேரில் ஒரு மஞ்சள் நிறமான தூளும், சர்க்கரை, மாவு, பிசின் தன்மையான புளிப்பு, கோந்து, கிளிசிரைசின், (glycyrrhizin) முதலியவைகளும்; பட்டையில் துவர் தன்மையுமுண்டு.

**குணம்:—** சினித்தகாரி, சீதளகாரி, கபஹரகாரி, மூத்திர வர்த்தனகாரி, ருதுவர்த்தனகாரி, பிரமேக ஹரகாரி, இலகுவிரேசனகாரி, விரிய வர்த்தனகாரி, சுகந்தகாரி.

**உபயோகம்:—** சுவாசாசயகுழல்களின் வீக்கங்களினாலுண்டாகும், இருமல், தொண்டைப் புகைச்சல், தொண்டைக்கம்மல், சுவாசகாசம் முதலியவைகளுக்கும்; மூத்திர தாரை, மூத்திரப்பை, குண்டிக்காய் இவைகளின் அழற்சியினாலேற்படும், நீர்கடுப்பு, நீர்சுருக்கு, நீர் கலங்கி காற்றமுடன் இறங்கும் புலால் மேகம், முதலியவியாதிகளுக்கும்; வயிற்றுள் அழற்சியினாலேற்படும் வயிற்றுக்கோளாறுகள், சீதபேதி முதலிய வியாதிகளுக்கும் இது உபயோகமாகிறது. இதனால் கண் ரோகங்களும் மூர்ச்சையும் தீரும். வாந்தி, அரோசகம், தாகம், முதலியவைகளுக்கும் உபயோ

கமாகும். நஞ்சுகளை விஷமிக்கத் தின்றவர்களுக்கு சினிக்தகாரியாகவும் உபயோகிக்கலாம். புண்களை ஆற்றுவதற்கும் சினிக்தகாரியாக உபயோகமாகும்.

மேல்நாட்டு வைத்திய முறையில், சத்தாகவும், கலவைச்சூரணமாகவும் செய்து இதே வியாதிகளுக்கு உபயோகம் செய்கிறார்கள்.

முசாம்பரம், நிலாவரை, நவச்சாரம், முதலியவைகளின் கசப்பு உருசியை மாற்றவும், மணம் உண்டுபண்ணவும் சுகந்தகாரியாக சேர்க்கப்படுகிறது.

சுதேச முறையில் தயாரிக்கப்படும் லேகியம், கிருதம், சூரணம், முதலிய எல்லா வகை மருந்துகளிலும் அதிமதுரம் உபசரக்காக சேர்க்கப்படுவதுண்டு.

இருமல், தொண்டை கரகரப்பு, தொண்டைபுகைச்சல் முதலியவைகளில் அதிமதுர வேரை வாயில் அடக்கிக்கொண்டு அதன் சாற்றை விழுங்கலாம்.

இருமல், ஜலதோஷம், தொண்டைக்கம்மல், நீர்ச்சுருக்கு முதலியவைகளுக்கு அதிமதுர கஷாயம் உபயோகமானது.

அதிமதுரம், உளுந்து, கொத்தமல்லி; இவற்றை தண்ணீர்விட்டு அரைத்துக்கலக்கி, கஷாயமாகச் காய்ச்சி, அக்கஷாயத்துடன் சமன் பன்றிக்கொழுப்பைச் சேர்த்துக் காய்ச்சி 3 - 4 துளி வீதம் காதில் விட்டுவர காதிரைச்சல், காதுக்குத்து, செவிடு முதலியவைகள் நீங்கும்.

அதிமதுரம், காவி, இந்துப்பு, மரமஞ்சள், அஞ்சனக்கல், இவற்றை சம அளவாக யெடுத்து தண்ணீர் விட்டரைத்து, கண்ணைச் சுற்றிலும் வளையமாக பற்று போட்டுவர, நயன ரோகங்கள் தீரும்.

அதிமதுரம், அல்லிக்கிழங்கு, திராக்ஷக்காய் (அல்லது பழம்) இவற்றுடன் சமன் நல்லெண்ணை, நெய், பால் முதலியவைகளை சேர்த்தரைத்து, தலையில் தடவிவர மயிருதிர்தல் நின்றுபோம். மயிரை செழிப்பாகவும், அடர்த்தியாகவும் வளரச்செய்யும்.

அதிமதுரம், வெண்சந்தனம், பெருங்குரும்பை, நெட்டிக்கோரைவேர், அல்லிக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், தாமரைப்பூ, இவற்றை சம அளவாக எடுத்து தண்



ணீர் விட்டரைத்து, பற்று போட்டுவர, பித்த வியாதிகளா லுண்டாகும் வீக்கங்கள் வற்றும்.

அதிமதுராதி கஷாயம் :— 20 அவுன்ஸ் கொதிக்கிற நீரில் 2½ அவுன்ஸ் (எடை) அதிமதுரத்தூளைப் போட்டு ½ மணி நேரம் மூடிவைத்திருந்து வடிகட்டி 2-4 அவுன்ஸ் விதம் நாள் ஒன்றுக்கு 3-4 முறை கொடுக்கலாம்.

மெல்லினமான தேகிகளுக்கு இலகுவிரேசன காரியாக அதிமதுரத்தூள் ஒரு பங்கு, சதகுப்பைத்தூள் ஒரு பங்கு, சூரத்து நிலாவரைத்தூள் 2 பங்கு, சுத்தி செய்த கந்தகத்தூள் 4 பங்கு மாவுச்சீனி (பூராச்சர்க்கரை) போதுமானது ஒன்று சேர்த்துக் கொடுக்க ஆயாசமின்றியும், சிரமமின்றியும் இரண்டொருமுறை மலம் கழியும்.

க்ஷயரோகிகளுக்கேற்படும் பசிமந்தத்திற்கு; அதிமதுரதூள், பேதனுவிரைதூள், வெட்டிவேர்தூள், வகைக்கு 2 டிராம் (எடை) சற்பூரம், குங்குமப்பூ, சன்னலவங்கப்பட்டைதூள், சரக்கொன்றை விரைதூள், சல்லாது விரைதூள், சந்தனத்தூள், ரோஜாமொக்கு, தர்ப்பூசனி விரைதூள், வகைக்கு ஒரு டிராம் (எடை) வாதுமைபிசின் ½ டிராம், ஒன்று சேர்த்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு 3 வேளை; வேளை 1 - 1½ டிராம் விதம் கொடுத்து வரலாம்.

பித்த சுரத்திற்கு அதிமதுரம், கொத்தமல்லி, கோரைக்கிழங்கு, சீந்தில் தண்டு, வகைக்கு ½ தோலா விதம், 20 அவுன்ஸ் தண்ணீரில்போட்டு, பாதியாக சுண்டவைத்து கஷாயத்தில் 1 - 1½ அவுன்ஸ் விதம் கொடுக்கலாம்.

மலேசுரம் (**Malaria**) இருமல், சுரக்கட்டி, இவைகளுக்கு, அதிமதுராதி லேகியம் மிகவும் சிறந்தது. சுரக்கட்டிக்கு நீடித்து சாப்பிட குணமேற்படும்.

அதிமதுராதி லேகியம் :— அதிமதுரவேர் 8 தோலா, உலர்ந்த திராக்ஷபழம் (கிஸ்மிஸ்) 48 தோலா, மாவுச்சர்க்கரை 32 தோலா, கடுக்காய், தான்றிக்காய், கிராம்பு, சாதிக்காய், கிச்சிலிக்கிழங்கு, இலவங்கப்பட்டை இவைகளின் தூள் வகைக்கு தோலா 2; பெருஞ்சீரகம், நெல்லிவற்றல், சதகுப்பை இவற்றின் தூள் வகைக்கு தோலா ½, இதில் அதிமதுரவேர் தூளை 96 அவுன்ஸ் தண்ணீருடன் சேர்த்து 48 அவுன்ஸாக சுண்டக் காய்ச்சிய கஷாயத்துடன் சர்க்கரை

யைசேர்த்து பாகுபதமாக்கி, தூளினங்களை சேர்த்துக் கிண்டியபின் திராக்ஷபழத்தை சேர்த்து பிசைந்து, அதன்பின் நெய், தேன் போதுமானது சேர்த்துக் கொள்ளவும். இதில் ¼ - 1 தோலா வீதம் காலை மாலை கொடுத்து வரலாம்.

சுவாசகாசம், க்ஷயம் உள்பட எல்லா சுவாசாசயம், சுவாசக் குழல் வியாதிகளுக்கும், அதிமதுராதி வடகம், அதிமதுராதிமாத்திரை முதலியவைகள் சிரேஷ்டமானவை.

**அதிமதுராதிவடகம் :—** அதிமதுரப்பால், 3 பங்கு, வால்மிளகு, கருவ பிசின் வகைக்கு ஒரு பங்கு, சர்க்கரை 4½ பங்கு, எல்லாவற்றையும் தூள்செய்து பிசைந்து ¼ தோலா இடை அளவாக பில்லைகள் செய்துகொண்டு நாள் ஒன்றுக்கு 3 வேளை ஒரு பில்லை வீதம் கொடுத்து வரலாம்.

**அதிமதுராதி மாத்திரை :—** அதிமதுரப்பால் 10 பங்கு கருவேலம் பிசின் 8 பங்கு, மிளகு 6 பங்கு, அக்கிராகாரம் 4 பங்கு, சீந்தில் சர்க்கரை 6 பங்கு, குங்குமப்பூ 12 பங்கு, சர்க்கரை 10 பங்கு ஒன்று சேர்த்து, அதிமதுரக் கஷாயம் விட்டரைத்து, 5 கிரைன்ஸ் அளவாக உருட்டிக்கொண்டு நாள் ஒன்றுக்கு 3 வேளை, வேளையொன்றுக்கு 1 - 2 மாத்திரைகள் வீதம் கொடுக்கலாம்.

**அளவுகள் :—** (கஷாயம்) 2-4 அவுன்ஸ். (அதிமதுரப்பால்) ¼-1 டிராம். (தூள்) ½-1½ டிராம். (கலவைச்சூரணம்) 1-2 டிராம். (லேகியம்) ¼-1, ¾-3 டிராம்.

---

## 2-ம் ஆண்டு

நம் சித்தனுக்கு இவ்விதழோடு 2-ம் ஆண்டு பூர்த்தியாகிறது. தங்கள் சந்தாவை செலுத்தாத அன்பர்கள் தயவுசெய்து தாமதமில்லாது உடனே அனுப்பி வைப்பதோடு முன் போல் பத்திரிகையை ஆதரிக்க வேண்டுகிறோம். "ஆசிரியர்."

# செய்தித் திரட்டு.

### காதலை அளக்கும் கருவி!

ருமேனியா தேசத்தவரான புரோபசர் ஜார்ஜ் மேரினெஸ்கோ என்பவர் இந்த நூதன கருவியைக் கண்டுபிடித்திருக்கிறாராம். ஈயத்தால் செய்யப்பட்ட 2-தட்டுகளுக்கும், கேல்வனோமீட்டர் என்னும் அளவு காட்டும்கருவிக்கும் இடையே பல மின்சார கம்பிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. சோதிக்கவேண்டியவரின் இரு கைகளிலும் 2 தட்டைவைத்து, ஒவ்வொருபெயராக உச்சரிக்கப்படுமாம். காதலிப்பவரின் பெயர் உச்சரிக்கப்படும்போது அதிலுள்ள ஊசி, ஊசலாடி உண்மையைத் தெரிவிக்குமாம்.



(தாராசசாங்கம் - தமிழ் பேசும் படத்தில் ஓர்காக்ஷி.)

* * *

### 58 - தடவை மணம்!

கடந்த 8 வருஷங்களுக்குள்ளாக, ஓர் ரஷ்ய சர்க்கார் அதிகாரி 58-தடவை விவாகம் செய்துகொண்டிருக்கிறார். அதுமாத்திரமல்ல, 57-தடவை விவாகரத்தும் செய்திருக்கிறாராம்.

## ஒரு தடவையில் 6 - குழந்தைகள்.

சென்ற மாதம் மியாமி என்ற நகரில் ஒரு ஹரிஜன மாது ஒரே சூலில் 6-குழந்தைகளைப் பெற்றாள். அவைகளில் 5 உடனே மறித்துப்போயின. ஒன்றுமட்டும் பிழைத்திருக்கிறதாம்.

* * *

## சென்னையில் பெண் வக்கீல்.

சென்னை சிப் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் மார்க்கெட், ஜஸ்டிஸ் லெக்ஷ்மண ராவ் இவர்கள் முன்பாக ஸ்ரீமதி இ. டி. சொக்கம்மாள் சென்ற மீ 19-௳ தன்னை ஒரு அட்வகேட்டாகப் பதிவுசெய்துகொண்டாராம்.

* * *

## கொசுப் பண்ணை!

தென் கரோலினாவில் சில டாக்டர் கொசுப்பண்ணை வைத்து வளர்க்கிறார்களாம். மலேரியா ஜுரம், பைத்தியம் முதலிய அபாயகரமான வியாதிகளைப் போக்க அது உதவுவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். ஆஸ்பத்திரி அதிகாரிகள் கொசுக்களை ஏராளமாய் வாங்குகின்றனராம். கொசுக்கள் பார்சல் மூலமாய் அனுப்பப் படுகின்றனவாம்.

* *

## தீ பிடிக்காது.

லண்டன் இம்பீரியல் ரசாயன ஆராய்ச்சி சாலையில் ஒரு நூதன வஸ்து கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம். அதை மரம் காகிதம் முதலியவைகளின்மீது தடவிவிட்டால், நெருப்பு, பிடிப்பதே இல்லையாம். எரியும் நெருப்பில் அவைகளைப்போட்டாலும் தீப்பற்றுவதுமில்லையாம். சேதமும் இல்லையாம்.

## உண்மைக் காதல்

1896-ல் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த வெள்ளைச் சிப்பாய் தான் காதலித்த மங்கையை மணம் முடிக்க நிச்சயித்தார். விடுமுறை நாளில் தன் தேசம் போனபோது, அம்மங்கைக்கு ஏற்கனவே மணமாகிவிட்டதறிய ஏமாந்து மனமுடைந்தார். 40 வருடங்கள் ஓடிமறைந்தன. சிப்பாய் தன் காதலியின் எண்ணத்தை கொஞ்சங்கொஞ்சமாய் மறந்து வந்தார். ஒருநாள் வீதியில் நடக்கும்போது எதிர்பாராதவிதமாய் தன் காதலியைக்கண்டார். சென்ற மாதம் அவர்கள் மணம் செய்துகொண்டனராம். மணமகன் வயது 62. மணமகள் வயது 60.



* * *

## வாடகை அபாரம்.

மன்னர் மகுடாபிஷேகம் காரணமாக லண்டனில் குடியிருப்பு வீடுகளுக்கு வாடகை மிக உயர்கிறதாம். 15 நாட்களுக்கு 35,000 ரூபாயென ஒருவர் வாடகை பேசியிருக்கிறாராம். வேறொரு இடத்தில் ஒரு அறைக்கு ரூ. 15,000 வாடகையாம். ஒரு இந்திய சமஸ்தானமன்னர் ஒரு ஹோட்டலிலுள்ள 50 அறைகள் கேட்டாராம். அவைகளுக்கு லக்ஷக்கணக்கான ரூ. கொடுப்பதாகவும் வாக்களித்தாராம். ஆனால் இடம் கிடைக்கவில்லையாம்.

* * *

## ரோமாபுரியில் தமிழ் சங்கம்.

ரோமாபுரியில் வீரமாமுனிவர் தமிழ்ச் சங்கம் என்ற பெயருடன் 1934-ம் ஆண்டிலிருந்து ஒரு தமிழ்ச் சங்கம் ஏற்பட்டு நடந்துவருகிறதாம். இதன் மூன்றாவதாண்டுவிழாவை சில மாதங்களுக்கு முன்தான் கொண்டாடினார்களாம்.

* * *

## பிணந்தின்னும் சாது.

வங்காளத்தில்மைமன்சிங் வாசியானதுர்க்காசரண்என்ற சாது சுடுகாட்டுக்கு பக்கத்தில் ஒரு குடிசையில்வசித்துவருகிறானாம். ஒருநாள் வெந்துகொண்டிருந்த ஒரு ஸ்திரீயின் பிரேதத்தைத் தின்றுகொண்டிருந்தானாம். மற்றொருநாள் புதைத்திருந்த ஒரு போலீஸ்காரன் மகளின் பிரேதத்தைஎடுத்து தின்றுகொண்டிருந்தானாம்.

## வாழ்க்கை இனிமை!

"எனக்கு இப்போதே என் விளையாட்டுக்களை எல்லாம் விட்டுவிட எண்ணமில்லை. நான் விரும்பும் அளவு எனக்கு ஆயுளில்லை. நான் தொடங்கிய விளையாட்டுக்களில் இன்னும் எவ்வளவோ முற்றுப்பெறாமல் இருக்கின்றன. சிலவற்றை நான் இன்னும் தொடவே இல்லை. விஞ்ஞான முறைகளையெல்லாம் ஒன்றாகத் திரட்ட ஒரு இயக்கம் — ஒரு ஸ்தாபனம் இக்காலத்தில் மிகமிக அவசியம். என்பது என் உத்தேசம்."

எச். ஜி. வெல்ஸ்.

## ஷிலிபாக்ஸ் காமிரா.

## ரு 2--12-0.



ஜெர்மனி லென்ஸ் பொருத்தப்பட்டது பழக்கமில்லாதவர்களும் கூட கார்டு சயிஸ் அளவில் நொடிப்பொழுதில் போட்டோ எடுக்கலாம். வேலையற்றுத்தவிப்போர் தினசரி 5-ரூ க்கு குறையாமல்சம்பாதிக்கலாம். உபயோகிக்கும் விதம் சுருக்கம். கையாளுவதற்குவேண்டிய பிளேட், கார்டு, மருந்துகள் இனாம்.

விலை ரூ. 2—12—0. உயர்ந்த ரகம் ரூ. 3—12—0.

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம்.

எல்லாவித காமிராக்களும் எங்களிடம் கிடைக்கும்

விலாசம்:- **EASTERN TRADING COY,**

*PostBox No. 12204:- Hatkhola, CALCUTTA.*



# 'அறிவுக்கொடி.'

## ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை.

ஆசிரியர் மிஸஸ். சாமி சிதம்பரனார்.

அறிவு வளர்ச்சி, தமிழ் மொழி வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக்காக்ஷி, மனதைக்கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களுடன் ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ம்தேதி தோறும் வெளிவரும்.

| வருஷ சந்தா. | | தனிப்பிரதி. |
|---|---|---|
| உள் நாடு | ரூ. 1—0—0. | உள் நாடு 0—1—6. |
| வெளி நாடு | ,, 1—8—0. | வெளிநாடு 0—2—6. |

மானேஜர், 'அறிவுக்கொடி,' கும்பகோணம்.



## ரொம்பவும் சுலபமான சிறுவர் போட்டி.

எழுதத்தவறாதீர்கள் ! வெற்றி நிச்சயம் !

## ரொக்கப் பரிசு ரூ. 500.

| நெ. | குறிப்பு. | வார்த்தை. |
|---|---|---|
| 1 | தடாகம்...... | — டு |
| 2 | ஜம்புகம்..... | — ரி |
| 3 | அம்மா...... | — ய் |
| 4 | சுனகன் ...... | நா — |
| 5 | பர்வதம்...... | — லை |
| 6 | உணவு........ | — று |
| 7 | நவதானியம். | — ள் |
| 8 | தீர்த்தம்...... | — ர் |

சரியான விடையை பழனி சித்தன் ஆபீசில், டிபாசிட் செய்யப் பட்டிருக்கிறது. ரொக்கப்பரிசு 500ரூ. முதல் பரிசு 350 ரூ. இரண்டாம் பரிசு 150 ரூ. நம்மிடம்மீதியுள்ள 269-4-0 வையும் கலந்து பங்கிடப்படும். பிரவேசகட்டணம் விடை 1-க்கு 0-2-0 தான். முடிவு தேதி 31-12-1936. 50-விடை அனுப்புவோருக்கு 15 ரூ. பரிசு. ஸ்பெஷல் பரிசுகளும் உண்டு. ரொம்பவும் சுலபமான போட்டியாகும். கஷ்டமே கிடையாது. — இம்மாதிரி கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்து தனி காகிதத்தில் எழுதி பிரவேசகட்டணத்திற்கு ஒரு அணா போஸ்டல் லேபில்களையாவது M. O. யாவது முடிவு தேதிக்குள் அனுப்பவேண்டும். சிலோன் நேயர்கள் லேபில் அனுப்பலாகாது. மானேஜர் தீர்ப்பே முடிவானது. 10-1-1937 வெளியாகும் சித்தனை எதிர்பாருங்கள். முதல் பரிசுபெற்றநேயர்களுக்கு தனியாக உடனேதெரிவிப்போம்.

மானேஜர், கருணாநிதி நிலயம்,

ஆலூர். ஜ. வேட்டவலம், தி. மலை.



பரிசுத்தமான

## அயிஷா போறக்ஸ் ஸோப்பை

வாங்கி உபயோகியுங்கள்.

ரிஜிஸ்டர் **No 2105.**

*TRADE MARK.* **CAMEL.**

*PROPRIETOR:*

**M. MEERAN MOHIDEEN,**

**Islamia Soap Works, ALLEPPEY.**

# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது.)

(550-ம் பக்கத்தொடர்ச்சி.)

அங்கம் 5.] [களம் 3.

பாத்திரங்கள்:— நாகானந்தன், வீரகேசரி, சுகுணன்.

காலம்—இரவு. இடம்—நாகானந்தன் கிரகம்.

*நாகானந்தன்:*— அன்பரே! என்னினும் தௌர்பாக்கியன் உலகில் உளனோ? குலமது விளங்காக் கடையனாய்த் தபோவனம் வளர்ந்தேன்; தபோதனர் அருளால் ஆசுறு அறநூல் முற்றுமுணர்ந்தேன்; போரில் வல்லோனானேன்; பாண்டியர் அன்பினைப் பெற்றேன்; போர்வீரர் தம் தலைவன் ஆனேன்; சோணாடு முற்றும் வென்றேன்; இளவரசியார் ஆருயிர் மீட்டேன்—அவர்தம் காதல் பெற்றேன்; அதுபற்றி அவர்தம் உரிமை சந்திரகுமாரர்தன் பொறாமைக்காளானேன்; ஆதலின் அவரால் கொலைஞனெனக் குற்றஞ்சாட்டப்பட்டேன்; பன்னவையுற்றேன்; என் குற்றமற்ற தன்மையை விளக்கும் வழியிலன் ஆனேன். என் மனையே பல் வீரர் காக்கும் காராக்கிரகமாயிற்று; என் வாழ்வு மன்னர் கையுளது. அவர் குற்றவாளியென கருத்திற் கொள்ளின் மாரண தண்டனை வந்தெய்தும். அன்றெனின் பிராணதானம் பெறுவன். அவர் நிர் அபராதியென விண்டு மீட்டும் உயிர் பெற்றுத்தானென்னை? ஒரு சார்பினர் புகழ்ச்சிக்கும், மறுசார்பினர் இகழ்ச்சிக்கும் ஆளாதல்வேண்டும். நான் குலநலமில்லானாதலின் என் காதலின் பலனென்னாம்? இளவரசிதனைப் பெறும் பாக்கியமிலாக் காரணத்தால் அது ஓர் தலையாகி மக்கி மாய்வதேயாம். இளவரசியாரும் நகாவிடத்தன்பு பூண்டது பற்றி சுக நலமறியாது தேய்தல் வேண்டும். மற்றைய பயனோ, பொன்னங் கொம்பனாளைப்பற்றி நுகர்வதால் இன்பப்பேறுபெற்று நாட்டிற்கு நல்லரசனாகலாமெனக் கருதிய சந்திரகுமாரர் எண்ணமெலாம் பட்டு அழிவதேயாம். அவரினும் நட்பினை என்பால் மிக்குக்-காட்டியவருமிலர், என் மேம்பாடு கோரியவருமிலர். நாங்கள் ஒருவரையொருவர் காதலித்த காரணம்பற்றியவருக்கென்பாலிருந்த விருப்பமெலாம் வெறுப்பாகி, என் நாசமும் கோருபவராய் மாறினர். என் இறப்பினால் அவர்தம் அவா முற்றும் நிறைவேறுவதாயின் நான் என் உயிரினையும் அளிக்கவும் துணிவேன். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் இரண்டாக் கலந்து அபேதமாய் விளங்கினும் விளங்கும். இனி இளவரசியின் மனம் அவர் மனத்தோடு கலந்து உடலிரண்டு, உயிரொன்றென விளம்புமாறு விளங்குமா? எது முக்காலும் இலதென்றே செப்பலாம். இதற்கு யான் என் செய்வது?

*வீரகேசரி:*— ஐய! மானிடர்பால்விளங்குவதுவாய்மையன்றிப் பொய்மை. வாய்மையாளரைக்காண்பது அருமை. பொய்யரோ பெருகவுளர். வாய்மை உறையாடுவது முன்னர் துக்கத்தையும், பின்னர் சுகத்தினையும் அளிப்பது திண்ணம். பொய்மையோ முன்னர் சுகமென விளங்கிப் பின்னர் முற்றும் கஷ்டம் தருவது. நீரோ பொய்யா மொழியினர். அதுபற்றி முன்னுக்குக் கஷ்டமும் பின்னுக்குச் சுகமும் பெறுபவர். சந்திரகுமாரரோ பொறாமை என்னும் பேயினாற்பிடியுண்டு பொய்மையலாது மெய்மை பகரும் மார்க்கம் அறியாதவராயுளர். அதுபற்றியவருக்கு முன்னர் எத்தும் பின்னர் ஏமாற்றும் பயனும். விஷயமிப்படியிருக்க நீவிர் தம்மை நோவதிலாவது அவரை ஏமாற்றத்தினின்றும் விலக்க முயல்வதிலாவது யாது பயன்? தாங்கள் கருதுவது போன்று நீவிர் குலத்திற் குறைந்தவரல்லர். "குலத்திற் பெரியன். முன்னுக்கு எல்லாம் மறைந்திருப்பினும் பின்னுக்கு எல்லாம் நன்கே விளங்கும். விளக்கம் உறுவதும் சமீபத்திலேயே. ஆதலின் சுகுண சுந்தரியின் காதற்குகந்தவன். அவனே" என வரகுண வழுதியார் என்பால் மொழிந்தனர். அந்தோ அவரும் சந்திரகுமாரரால் கொலையாயினரே. இனி என் செய்வது.

*நாகானந்தன்:*— அந்தோ! சந்திரகுமாரரே! குணக்குன்றமான வரகுணரையா கொன்று என்னை அப்பழிக்கு ஆளாக்கவேண்டும்? நேரில் என்னையே கொன்று ஆழத் தோண்டித் தாழப் புதைத்திருத்தல் கூடாதா? நாளடை

வில் சுகுணசுந்தரிதன் மனத்தினின்றும் நழுவி வீழ்வேன். பின்னர் நீவிர் தொத்திப் பற்றலாம். எல்லா நலமும் பெறலாம். நீவிரே வரகுணரைக் கொன்றவரென்று இன்னமுமெண்ணுவர். நான் உயிர் துறக்கினும் நீவிர் கொலைஞராகவே காண்புறுவீர். அதுபற்றி எக்காலமும் நீவிர் அவர்தனைப் பெறும் மார்க்கம் இல்லை. ஆதலின் நும் எண்ணமெலாம் வானத்துட் கட்டிய கோட்டையாம்.

வீரகேசரி:— மித்திரரே! ஏது விபரீதமே எண்ணமிடலானீர்? நம்மிறைவர் என்ன அறிவிலிபா? சந்திரர்பால் முறையிட்டு பார்ப்பினியைக் கொன்றவன் வேடன் எனும் உண்மையைத் தெரிந்தவர் சந்ததி வந்தவரன்றோ? ஒற்றரால் உண்மையை ஓர்தல் அரிது. மறைவிடமிருந்து தெரிந்த லேசலமெனுமுறையினைக்கைக்கொண்டு ஒழுகுபவரன்றோ? அவ்வாறின்றேல் காவல் கடந்து கன்னிதன் பூஞ்சோலை சென்ற நீவிர் வரகுணரால் தமது தகாஒழுக்கம் அறிபடவே அவ்வாபத்தினின்றும் தப்புவான் வேண்டி அவரைக் கொலை புரிந்திருத்தல் கூடாது? உடன் பிறந்தாளின் புத்திரனும் அவரால் தன் புதல்விக்கேற்ற மணாளன் என வரிக்கப்பட்ட சந்திரகுமாரர், நீவிர் கொலை செய்ததாகவும், தானே பிரத்தியக்ஷமாகக் கண்டதாகவும் சாக்ஷி கூறியும் உமக்குக் கொலை தண்டனை கொடாது முடிவினைத் தள்ளி வைப்பானேன்? உண்மை ஓர்தர் பொருட்டேயாம். ஆகலின் உண்மை வெளியாம்; விடுதலையும் பெறுவீர்; பிறப்பும் துலங்கும்; இளவரசியையும் மணப்பீர். வீண் மனோராஜ்யமகற்றும். எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்தியும்.

சுகுணன்:— (போந்து) குழந்தாய் வீரகேசரி! விஷயம் நன்கே விளக்கினாய். உன்மாற்றம் முற்றும் உண்மையே. சந்திரகுமாரனே கொலைஞன். தண்டனைக் குரியன். நாகானந்தன் காலஞ்சென்ற சோழர் புதல்வன். பெருங்குலத்தான். ஆதலின் என் கண்மணிக்கேற்ற காதலன். என் நாட்டிற்கேற்ற நாயகன். தமிழகம் மூன்றிற்கும் உரித்தான பேரரசன். குழந்தாய்! நாகானந்தா! வருக. ஆலிங்கனம் தருக.

(ஒருவரையொருவர் தழுவுதல். பின்னர் நாகானந்தன் நமஸ்கரித்தல். சுகுணன் ஆசி கூறுதல்.)



வீரகேசரி:— தமிழகம் மூன்றிற்கும் முதல் மன்னனாரசன் வீரகேசரி பணிகின்றேன்.

(இடையே சேவகன் போந்து)

சேவகன்:— நராதிப! வரகுணர் இறந்தாரில்லையாம். மூர்ச்சையுற்றிருந்தனராம். சைத்யோபசாரங்களால் மீட்டும் பிரக்ஞையுற்றனராம். இளவரசியார் தங்களைக் காணும் அவா மேலீட்டால் என்னை விடுத்தனர். தங்கள் அந்தரங்க ஒற்றரால் தமது இருப்பிடம் அறிந்து வந்து விண்ணப்பம் செய்துகொண்டேன். ஆக்ஞையை யெதிர்பார்க்கிறேன்.

சுகுணன்:— குழந்தைகாள்! நாகானந்தா! வீரகேசரி! என்னுடன் வருக! சிறிய தந்தைபால் ஏகுவம். எல்லாம் பூரணமே அறிவம். (எல்லவரும் மறைதல்)

## அங்கம் 5, களம் 4.

பாத்திரங்கள்:—சுகுணசுந்தரி, முத்துமாலை, மோகன மாலை.

(சுகுணன், நாகாநந்தன், வீரகேசரி பிரவேசம்).

சுகுணன் :— குழந்தைகாள்! இவ்விடம் விட்டகல வேண்டாம். இந்நாகானந்தன் வீரகேசரிச் சோழன் புத்திரன். இவன் சுகுணசுந்தரி உயிருங்காத்து மனமும் பெற்றவன். ஆகலின் அவனே சுபமாய் வரித்தவன் ஆகின்றான். வீரகேசரியோ முத்துமாலை தன் காதலன். ஆதலின் அவனும் இங்கு வருவதற்குரியன். மோகனமாலா உன்னுருயிரன்ன பிரதாபருத்திரனையும் சமீபமே சோணாட்டினின்று வரவழைப்பேன். உங்கள் மூவர் மணமும் ஓரே சுப முகூர்த்தத்தில் என் அரண்மனை சபாமண்டபத்தில் பல்லோர் அறிய, பெரியோர் வாழ்த்த சுபமே நடக்கும்.

சுகுணசுந்தரி :— இவரை சோழர் திருப்புதல்வரென எவ்வாறு உணர்ந்தீர்? இவரல்ல கொலைஞரென எவ்வாறு தெளிந்தீர்?

சுகுணன் :— என் குல விளக்கே! உன்னைப் பிரிந்த பின், ஜபதுங்கன் கிரகம் அடைந்தேன். ஒதுக்கிடமிருந்து தந்தை தனயன் ஆகிய இருவர் சம்பாஷணை முற்றுங் கேட்டேன். அதனால் நாகானந்தர், வீரகேசரி சோழர் புத்திரன் என்றும், சந்திரகுமாரனே என் சிறிய தந்தையை மர

ணத்திற் கொத்த மூர்ச்சையாம் வண்ணம் மரக் கொம்பு கொண்டு புடைத்தனன் என்றும் ஓர்ந்தேன். பின்னர் நாகானந்தன் இருப்பிடம் போந்தேன். அவனையும் வீரகேசரியையும் சந்தித்துச் சமாதானம் பகர்ந்தேன். அது சமயம் நீ விடுத்த சேவகன் என்னைத் தேடி அங்கே வந்தான். அப்பால் இங்கு வந்தேன். அவர் என் செய்கின்றனர்?

சுகுணசுந்தரி :— தந்தாய்! அவர் உயிர் மீண்டதும் புலம்பல் துவக்கியது. அதன் பின்னர் நித்திரை செய்கின்றனர்.

சுகுணன் :- குழந்தாய்! புலம்பலில் யாது மொழிந்தனர்?

சுகுணசுந்தரி :— தந்தாய்! நீவிர் மொழிந்த விஷயமெல்லாம் அவர் வாய் வந்தன.

நாகானந்தன் :— என்றன் கோவே! விடை தரின் தபோவனம் உடனே சென்று இரணம் ஆறவும் ஜ்வரம் வாராது ஒழியவும் கூடிய நன் மருந்து கொணர்வேன்.

சுகுணன் ;— நாகானந்தா! அவ்வாறே செய்க. வழித் துணைக்கு வீரகேசரியையு மிட்டேகுக. முடியுமாயின் சந்திரானந்தரை பிரார்த்தித்து அழைத்து வா.

(எல்லோரும் மறைதல்.)

## அங்கம் 5, களம் 5.

பாத்திரங்கள் :— சுகுணன், சத்தியகீர்த்தி, சத்தியவிரதன், சத்தியவான், ஜயசீலன், ஜயவிரதன், நாகானந்தன், வீரகேசரி, வரகுணன், சந்திரானந்தர்.

இடம் :— சபா மண்டபம். காலம் :— காலை.

சுகுணன் :— மூதறிஞ்சரான அங்கத்தினர்காள்! நாம் சென்ற வாரம் முக்கிய சேனாதிபதி நாகானந்தன் என்சிறிய தந்தையார் வரகுண வழுதியாரைக் கொலை புரிந்தனன் என்னும் விஷயத்தைப்பற்றி விசாரித்து நியாயவாதிகள் வாதமும் கேட்டு, முடிவு கூறுதலை இன்றெடுத்து விளம்புவதென தீர்மானித்தனம். நல்வேளையாய் நாம் கருதியவாறு வரகுண வழுதியார் மாண்டாரில்லை. மரணத்திற்குச் சமதையாய் பெற்றிருந்த மூர்ச்சையினின்றும் தெளிந்து பிரக்ஞை யுற்றனர். சத்குரு சந்திரானந்தர் சிகிச்சையால் செவ்வனே



காயம் முற்றிலுமாறியது. அவர் இச்சமயம் அவைக்கண் வரவும் வாக்குமூலம் தரவும் சக்தியுளார். ஆதலின் முடிவு செய்தற்கு முன் அவர் தம் வாய்மொழி கேட்போம். சத்தியகீர்த்தியாரே! அவர் தமை யழைத்து வருக.

வரகுணர்பிரவேசம்.

தந்தாய்! வருக. ஆசனத்தமருக. தாம் மொத்துண்டு மூர்ச்சையான விஷயமாய்ச் சில கேள்விகள் வினவலாமோ?

வரகுணன் :— குழந்தாய்! சுகுண! நீ யன்றோ பாண்டிய நாட்டிறைவன். நானும் அதுபற்றி உன் பிரஜைகளில் ஒருவனன்றோ? அது பற்றி நீ கேட்டற்கு உரியன் - யான் உண்மையை ஒளியாது உரையாடுவேன்.

சுகுணன் :— தந்தாய்! தங்கள் சிரமிசை யடித்துத் தம்மை மூர்ச்சையாக்கியவர் யாவர்?

வரகுணன் :— குழந்தாய்! அது செய்தவன் நமது சந்திர குமாரனேயாகும்.

சுகுணன் :— தந்தாய்! சிறுபாட்டனார் தம்மை அவன் அப்படி யடிப்பானேன்?

வரகுணன் :— குழந்தாய்! நாகானந்தனது பிறப்பு வெளியாகாதிருக்கவும் அவனைக் கொலைஞனெனப்படுவதால் சுகுணசுந்தரி அவன்மேல் கொண்ட காதலை ஒழித்துத்தன் மீது காதல் கொள்ளலாகும் என்பவை கருதியே செய்த காரியம்.

சுகுணன் .— சென்ற பதினெட்டு வருஷ காலமாய்க் குலமும், பெற்றோரும் தெரியாது வளர்ந்து வந்த நாகானந்தன் வரலாறு தாங்கள் எவ்வாறறிவீர்?

வரகுணன் :— அவன் சின்னஞ் சிறு குழந்தையாயிருக்கையில் அவனது செவிலித்தாயால் என்பாலளிக்கப்பட்டனன். யான் நைஷ்டிக பிர்ம்மச்சாரியாதலால், குழந்தையை வளர்ப்பதால் விரதத்திற்குப் பிறரால் பழிச் சொல் வருமோ வெனக்கருதியே தபோதனர் சந்திரானந்தர் பால் விட்டது. செவிலியால் அவன் பிறப்பு உணர்வேன்.

சுகுணன் :— அப்படியாயின் அவன் யார் பெற்ற சேய்? எக்குலம் விளக்க வந்த புதல்வன்?

வரகுணன் :— அவன் வீரகேசரிச் சோழர்க்கும் அமிர்தவல்லி இராணியாருக்கும் உற்பவித்த உத்தமச் சிறுவன். அது பற்றிச் சோழர் குல விளக்கம்.

சுகுணன் :— சிற்றப்பா! தமது வாய்மொழி, முற்றும் கேட்டாயது. என் மனத்துட் பொதிந்து கிடந்த பெரும் பாரம் அகன்றது. நாகானந்தன் குலநலமிலான் என எண்ணியிருந்த எனக்கு அவன் சோணாட்டரசன் மைந்தன் என அறிய அளவிலாசந்தோஷம் எய்தியது. அவனே என் மகள் சுகுணசுந்தரியை மணக்க உரியவன். அவனே எனக்குப்பின் இந்நாட்டை யாளற் கேற்றவன். ஆதலின் குரு சுந்தரானந்தரை அழைப்பித்து அவனுக்கும் சுகுணசுந்தரிக்கும் மணம் முடிப்பித்து அவனுக்கு இளவரசு பட்டமும் கட்டி மகிழ விருப்புகிறேன். வேண்டிய ஏற்பாடு செய்வோம் வாருங்கள்.

காக்ஷி முடிகின்றது.

நாகானந்தருக்கும்—சுகுணசுந்தரிக்கும், வீரகேசரிக்கும்—முத்துமாலைக்கும், பிரதாபருத்திரனுக்கும்—மோகனமாலைக்கும் விவாகம். பின்னர் நாகானந்தருக்கு ராஜ்யாபிஷேகம். மேளவாத்தியங்கள் முழங்க, வேதியர் வேதம் ஓத, சுமங்கலிகள் வாழ்பாடி ஹாரத்தி எடுக்க மங்களகரமாய் காக்ஷி முடிகின்றது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

முற்றிற்று

அச்சமற்ற கண்டனம்! —
— ஆணித்தரமான அபிப்பிராயம்.

ஏழை, பணக்காரர் வேற்றுமையற்றது, பாரதநாட்டின் தொழில், பொருள் அபிவிருத்திக்கு உழைப்பது,
— தொழிலாளர் நலன் நாடுவது —

"விஸ்வ பந்து"

பத்திரிகையே.

ஆசிரியர்:- தி. ம. நடராஜன் அவர்கள்.

இதனை ஆதரிப்பது உங்கள் கடமையல்லவா?

வருட சந்தா
உள்நாடு ரூ. 3—0—0. வெளிநாடு ரூ. 5—0—0.
தனிப்பிரதி அணா 0—1—0.

காரியஸ்தர், விஸ்வபந்து, காரைக்குடி.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்.

'வர்த்தகமணி'

வர்த்தகசம்பந்தமான விஷயங்களை அடிப்படையாய்க் கொண்டு, நவீன இலக்கியம், நாவல், சிறுகதை, ராஜீயம், புராதன சரித்திரசம்பந்தமான விஷயங்களுடன் வெளிவரும்
மாத வெளியீடு.

விளம்பரத்திற்குப் பிரதானமானது.

வியாபாரம் செழிப்படைய தொண்டாற்றுவதில் எப்பத்திரிகைக்கும் முன்னணியிலிருப்பது.

வருட சந்தா மதுரைக்கு ரூ. 0—4—0.
" இந்தியாவிற்கு ரூ. 0—6—0.
" வெளிநாட்டிற்கு 0–12—0
தனிப்பிரதி 0—0—3. வெளிநாட்டிற்கு 0—0—6.

மானேஜர், "வர்த்தகமணி" ஆபீஸ்,
ராய[illegible] வீதி, மதுரை.

## ‘புது உலகம்.’

ஓர் நவீன ஆராய்ச்சி சஞ்சிகை.

பல அறிஞர்களுடைய கட்டுரைகள், உலக நிகழ்ச்சிகள், தத்துவஞான, விஞ்ஞான பொருளாதாரக் குறிப்புகளும் கொண்டது.

சந்தா உள் நாடு ரூ. 1—8—0 வெளிநாடு 2-வெள்ளி.

“புதுஉலகம்” ஆபீஸ், தங்கசாலைவீதி, சென்னை.

---

தேவை! ஏஜண்டுகள் தேவை!!

## ‘ஜகன் மோகினி’

மாதாந்தர நாவல் சஞ்சிகை.

13-வது ஆண்டு நடக்கிறது. ஜீவிய சந்தா ரூ. 25.

வருஷ சந்தா ரூ. 1—8—0. தனிப்பிரதி அணா 2.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்! இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

ஜகன்மோகினி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

ஞானமுள்ள பெற்றோர்
தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

## சிறுவர் அறிவுக்கதிர்.

இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப்பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித்துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக்கொண்டது. மாதிரிக்காப்பிக்கு ஐந்து காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா உள்நாடு 12 அணா. வெளிநாடு 1—4—0.

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:— சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு. (தென்னிந்தியா.)

---

## ‘வம்பன்’

கதைகளும், விகடங்களும் நிரம்பிப் படங்களுடன் கூடிய செந்தமிழ் மாத வெளியீடு.

பாலர்முதல் விருத்தர்வரை ஆண் பெண் யாவரும் விரும்பும் கட்டுரைகள் பல செறிந்து விளங்கிப் படிப்போர்களை என்றும் மகிழச்செய்யும்.

ஆசிரியர்:— த. இராமநாதம் பிள்ளை.

தனிப் பிரதி அணா 2.

உள்நாடு வருட சந்தா ரூ. 1–4–0.
மலாய்நாடு ஷை ரூ. 2–0–0.

வம்பன் ஆபீஸ், 304, வால்டாக்ஸ் ரோடு,
பி. டி. மதராஸ்.

---

## ‘நவீனம்’

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை

ஆராய்ச்சி கட்டுரைகள், முதுமொழிகள், சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன கொண்டு நாவல் தொடர் கதைகளாக வெளிவரும் ஓர் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருட சந்தா உள்நாடு ரூ. 1–0–0. வெளிநாடு ரூ. 1–8–0.

“நவீனம் ஆபீஸ்”
வேப்பேரி, மதராஸ்.

---

## ‘லக்ஷ்மி’

ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்தித்துணுக்குகள் முதலி[illegible] நிறைந்தது. எளியசெந்தமிழ். அழகிய அட்டை[illegible] கூடியது. அதிகப் பக்கம், குறைந்தசந்தா. ஒ[illegible] வரும் படித்துப் பயன்பெறவேண்டியது. [illegible] 2.

சந்தா உள்நாடு ரூ. 1—0—0. வெளிநா[illegible] 3.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்தி[illegible]

மானேஜர், “லக்ஷ்மி” ஆபீஸ், [illegible]

## 'செங்குந்த மித்திரன்'

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு.)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அனுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா:- { உள்நாடு ரூ. 1—8—0. வெளிநாடு ரூ. 2—0—0.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,

138, பவளக்காரத்தெரு, சென்னை.

## 'அறிவு'

(ஓர் அறிவியல் மாத வெளியீடு)

பாட்டுகள், படங்கள், கதைகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் முதலிய பல அரியவிஷயங்கள்நிறைந்தது.

வருட சந்தா { உள் நாடு ரூ. 1-0-0. வெளி நாடு ரூ. 1-8-0.

189935

மானேஜர், "அறிவு"

சாத்தன்குளம், திருநெல்வேலி.

## 'லோகோபகாரி'

பழமையும், புதுமையும் கொண்ட வாரப் பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசிய பாடல்கள், ஆராய்ச்சிக் [கட்டு]ரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு வா[ரந்] எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் [தொகு]த்து நீள் பொதிந்து வெளிவருகின்றன.

வ[ரு]ட [இன்]றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

[வ]ருட சந்தா ரூ. 4—0—0.

விலாசம்:— "லோகோபகாரி"

[...]பேட்டை, சென்னை.

## "சிட்டி கெஜட்"

மாதமிருமுறை தமிழ் பத்திரிகை.

அச்சமற்ற கண்டனங்கள், ஆணித்தரமான அபிப்பிராயங்கள், அறிவு வளர்ச்சிக் கேதுவான கட்டுரைகள்.

வருட சந்தா ரூ. 0—12—0.

மானேஜர், சிட்டி கெஜட், கீழவெளிவீதி, மதுரை.

## "கிராம ஊழியன்"

வாரப் பதிப்பு.

ஆசிரியர்:— S. பூர்ணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொ[...]த்தோன்றி மாதம் இருமுறையாக வெளி வந்த கிரா[ம] ஊழியன் இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—1936ல் முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் கோரும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. வேண்டுவோர் விபரத்திற்கெழுதுக.

உள்நாடு வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5.

மானேஜர், கிராம ஊழியன் ஆபீஸ்,

துறையூர், (திருச்சி ஜில்லா.)

## "கதாநிதி"

அரிய நீதிகளைக் கதா ரூபமாக ஊட்டும் ஒருநவீன மாதச்சஞ்சிகை. பல அறிஞரால் இனிய தமிழில் எழுதப்படும் சிறு கதைகள், தொடர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், துப்பறியுங் கதைகள், சரித்திரக்கதைகள், புராணக் கதைகள் முதலியன கொண்டது. ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல்தேதி வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. தனிப்பிரதி அணா 2.

வெளிநாடு வருட சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 3.

மாதிரிப்பிரதிக்கு ½ அணா ஸ்டாம்பு அனுப்[...]

கும் ஏஜண்டுகள் தேவை. தக்கக[...]

"கதாநிதி" நி[...]

**Regd No. 3210.**



விலாச

…யங்கடத்தில் ஓர் காட்சி.

Sarni